மலர்-4 இதழ்-76 அக்டோபர் 16-31 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# எதை எப்போது தரவேண்டும் கடவுளுக்கு தெரியும்!

# சிவனே என்றிருப்பது

- சிவனே என்றிருப்பது என்றால் மனம் அமைதியாக இருப்பது என்று பொருள்
- வீணான எண்ணங்களில் இருந்து விடு பட்டிருப்பது என்று பொருள்
- கவலையிலிருந்து விடுபட்டிருப்பது என்று பொருள்
- எல்லாப் பொறுப்பையும் அவரிடம் கொடுத் தாகி விட்டது என்று பொருள்
- எல்லாம் நன்மைக்கே என்று பொருள்
- எதனாலும் குழப்பமடையாத நிலை என்று பொருள்
- ஆடாத, அசையாத நிச்சய புத்தி உடைய மனம் என்று பொருள்
- மனம் லேசாகவும், முகம் மலர்ந்திருக்க வேண்டும் என்பது பொருள்
- எந்த ஒரு சூழ்நிலையிலும் திருப்தியாக இருப்பது என்று பொருள்
- தன்னிடம் வருபவர்களின் மனதை அமைதி அடைய வைப்பது என்பது பொருள்
- ஏகாந்தத்தை அனுபவிப்பது என பொருள்
- சதாகாலம் அவரையே நினைத்திருப்பது என்பது பொருள்
- எந்த ஒரு சூழ்நிலையிலும் நிம்மதியாக இருப்பது என்று பொருள்
- தன்னால் பிறரும் பிறரால் தானும் துக்க மடையாத நிலை என பொருள்.
- உலகிய பொருட்களில் சாரமில்லை சிவமே இன்பம் என நிலைத்திருப்பதாக பொருள்.
- இப்படி பரம்பொருளான தந்தை ஈசனை என்றும் நினைத்து அவர் "சிந்தனை யிலேயே மூழ்கி இருப்பது ஒன்றே சிவனே என்றிருப்பது. என பொருள்படும்".

# வில்வ இலை சிறப்பு

சிவனுக்கு உகந்த வில்வ இலையை கொண்டு செய்யப்படும் அர்ச்சனை 'வில்வாஷ்டகம்' ஆகும்! இந்த அஷ்டகம் ஒவ்வொரு வில்வ இலையையும் அவன் திருவடிகளில் போடும் போது ஏற்படும் பலன்களை சொல்கிறது!!

1. முப்பிறவி துயர் தீர்க்கும்!
2. கோடி கோடி கல்யாணம் செய்து வைக்கும் பலன் தரும்!!
3. காசி காலபைரவர் தரிசனத்தால் வரும் பலன் தரும்!
4. திங்கள் கிழமை விரதம் இருந்து செய்கின்ற பூஜையின் பலன் தரும்!
5. சோமயாகம் வளர்க்கின்ற யாகபலன் தரும்!
6. கயைபிரயாகை யாத்திரையினால் கிடைக்கும் பலன் தரும்!
7. சாலக்கிராமம் வணங்கிடும் பலன், சானறோரை வணங்கும் பலன் தரும்!
8. கோடி யானை தான பலன், அஸ்வமேத யாக பலன் தரும்!
9. பாடசாலை பல ஆயிரம் அமைப்பதினால் வருகின்ற பலன் தரும்!
10. அன்னதானம் பல ஆயிரம் செய்வதினால் வருகின்ற பலன் தரும்!
11. வில்வாஷ்டகத்தை சிவன் அருகில் உரைப்போர்க்கு சிவனருளும் தினம் வரும், செல்வமெல்லாம் கூடி வரும்.





# ருத்ரம், சமகம் தினமும் கேட்பது நன்மை



- விளக்கேற்றும் போது மற்றவர்கள் ஏற்றி வைத்த விளக்கின் மூலமாக நம் விளக்கை ஏற்றக்கூடாது. தீப்பெட்டி மூலமாக தான் விளக்கேற்ற வேண்டும்.
- சனி பகவானுக்கு வீட்டில் எள்விளக்கு ஏற்றக் கூடாது.
- ருத்ரம், சமகம் போன்றவற்றை வீட்டில் காலையில் தினமும் கேட்பது நல்லது.
- பூஜையின்போது விபூதியை நீரில் குழைத்து பூசக் கூடாது. தீட்சை பெற்றவர்கள் மட்டுமே விபூதியை நீரில் குழைத்து பூசலாம்.

# காரியம் ஆகனும்னா கழுதையானாலும் காலை பிடி



கம்சன் தன் தங்கை தேவகிக்கு பிறக்கும் எட்டாவது குழந்தையால் தன் உயிருக்கு ஆபத்து என தெரிந்தவுடன் கணவன் ,மனைவி இருவரையும் சிறையில் அடைத்தான்...

இவர்களுக்கு குழந்தை பிறக்கும் சமயம், ஒரு கழுதையை சிறை வாசலில் கட்டி வைத்தான். சிறைக்காவலர்களை அவன் நம்பவில்லை. கழுதைக்கு நுகரும் சக்தி மிக அதிகம். குழந்தை பிறந்ததும் கத்த துவங்கி விடும்.கம்சன் வந்து கொன்று விடுவான். இப்படி ஏழு குழந்தைகள் இறந்தன.

எட்டாவது குழந்தையாக கிருஷ்ணர் பிறக்கிறார். உடனே தேவகி கணவன் வசுதேவன்... தயவு செய்து கத்தி விடாதே என கழுதை காலில் விழுந்து கெஞ்சினான். கழுதையும் கத்தவில்லை. கிருஷ்ணர் அவதாரம் நிகழ்ந்தது.

எனவேதான் **காரியம் ஆகனும்னா கழுதை யானாலும் காலை பிடி** என்ற பழமொழி வந்தது!

கர்நாடகாவில் அமிர்தாபுரத்து அமிர்தேஷ் வரான கோவிலில் வெளிச்சுவரில் வசுதேவர் கழுதை காலில் விழும் சிற்பம் உள்ளது.

# இராமேஸ்வர தரிசனத்தில் முழு பலனைத் தரும்

## ✦ நீலேஸ்வரர் லிங்கம் ✦ உப்பு லிங்கம் ✦ சேது மாதவர் ✦ பாதாள பைரவர்

இராமேஸ்வரம் கோவிலில் எவருக்குமே தெரியாத சில அற்புத சக்தி வாய்ந்த சன்னிதிகள் உள்ளது.

ராமேஸ்வரத்தில் பிரகாரங்களில் சுற்றி வரும்போது நிறைய லிங்கங்கள் இருப்பதை பார்த்திருப்பீர்கள்.

இவற்றில் சில லிங்கங்கள் கோவில் நிர்வாகத்தாலும், பக்தர்களாலும் கவனிக்கபடாமல், பூஜைகள் நடைபெறாமலும் இருப்பதையும் பார்த்திருப்பீர்கள்.

அப்படி ஒரு லிங்கம் பல நூறு வருடங்கள் பராமரிப்பு இல்லாமல் தூசி பிடிக்கப்பட்டு, பராமரிப்பு இல்லாமல் உள்ளது.

மூன்றாம் பிரகாரத்தில் நளன், நீலன், கவன் ஆகியோரால் பூஜிக்கப்பட்ட சிவன் சன்னதிகளுக்கு அருகில் உள்ள இந்த லிங்கத்தின் பெயர் நீலேஸ்வரர் லிங்கம்.

இந்த நீலேஸ்வரர் லிங்கத்தின் சிறப்பு என்னவென்றால் பல நூறு வருடங்களுக்கு முன்பு சீதையால் பிரதிஷ்டை செய்யபட்ட தற்போதுள்ள ராமநாதர் லிங்கத்திற்கு பதிலாக இருந்த மூலவர் லிங்கம் இவர்தான் என கூறப்படுகிறது

இந்த லிங்கத்தை தரிசிப்பதற்குரிய பிராப்தம் இருந்தால் தரிசிக்க முடியும்.

மேலும் ராமேஸ்வரம் கோவிலில் ராமநாதர் சன்னிதிக்கு பின்புறம் உப்புக்கல்லால் செய்யப்பட்ட ஒரு பழமையான லிங்கம் உள்ளது.

பல வருடங்களாக அந்த உப்புக்கல்லால் செய்யப்பட்ட உப்புலிங்கம் கரையாமல் அப்படியே உப்புக்கல்லாகவே இருப்பது மிகவும் அதிசயமாகும்.

இந்த லிங்கம் வந்ததற்கு ஒரு கதை கூறப்படுகிறது.

ஒரு முறை சிலர், ராமேஸ்வரம் கோவிலில் உள்ள லிங்கம் மணலால் ஆனது அல்ல என்றும், அப்படி மணலால் செய்யப்பட்டது என்றால், அபிஷேகத்தின் போது கரைந்திருக்க வேண்டும் என்றும் வாதம் செய்தார்கள்.

அந்த நேரத்தில் பாஸ்கரராயர் என்ற அம்பாள் பக்தர், தண்ணீரில் எளிதில் கரையும் தன்மையுடைய உப்பில் ஒரு லிங்கம் செய்து, அதற்கு அபிஷேகம் செய்தார். ஆனால் அந்த லிங்கம் கரையவில்லை.

அம்பாளை வணங்கும் தன்னால் பிரதிஷ்டை செய்யபட்ட லிங்கமே கரையாதபோது, காக்கும் கடவுளின் மனைவியான சீதாதேவி பிரதிஷ்டை செய்த லிங்கம் கரையாமல் இருப்பதில் என்ன அதிசயம் இருக்கிறது’ என்று கூறினார்.

அவர் செய்த உப்பு லிங்கத்தை இப்போதும் நாம் தரிசனம் செய்யலாம்.

மேலும் இராமேஸ்வரம் கோவிலுக்கு செல்பவர்கள் அவசியம் சேதுமாதவர் சன்னதியின் மகத்துவத்தை தெரிந்து செல்வது நன்மை தரும்.

காலில் சங்கிலியுடன் காட்சிதரும் பெருமாள்தான் சேதுமாதவர், சுந்தரபாண்டியன் என்னும் மன்னன், பெருமாளின் தீவிர பக்தராக விளங்கினான்.

அவனது குழந்தை பாக்கியம் இல்லா குறையைத் தீர்க்க மகாலட்சுமியையே அவரது மகளாக அவதரிக்கும்படி செய்தார் பெருமாள்.

அவள் மணப்பருவம் அடைந்தபோது, பெருமாள் ஒரு இளைஞனின் வடிவில் வந்து அவளிடம் வம்பிழுத்தார்.

மன்னன் அந்த இளைஞனை சிறையில் அடைத்து, சங்கிலியால் காலைக் கட்டிப்போட்டான்.

பக்தனின் பக்திக்கு கட்டுப்பட்ட பெருமாள், அவ்வாறு சங்கிலியால் கட்டுவதற்கு இடமளித்தார்.

அன்றிரவில் மன்னனின் கனவில் இளைஞனாக வந்து சிறையில் அடைபட்டிருப்பது தானே என்று மன்னனுக்கு உணர்த்தவே, இருவருக்கும் திருமணம் செய்விக்கப்பட்டது.

இளைஞராக வந்த சுவாமி, இங்கு சேதுமாதவராக அருளுகிறார். அவரது காலில் சங்கிலி கட்டப்பட்டிருக்கிறது.

இவரது சன்னதி அருகில் லட்சுமி நாராயணர், யோக நரசிம்மர் இருவரும் அருகருகில் காட்சி தருகின்றனர்.

கடுமையான பிதுர்தோஷம் உள்ளவர்கள் இராமேஸ்வரம் கோவிலில் உள்ள அனைத்து தீர்த்தத்திலும் நீராடிவிட்டு இந்த சேதுமாதவர் சன்னதி முன்பு, கடல் மணலில் லிங்கம் பிடித்து வைத்து தங்கள் கோரிக்கைகளைச் சொல்லி வணங்கினால் மட்டுமே கடுமையான பிதுர்தோஷத்தை நீங்கும் என்பது எவருக்குமே தெரியாத தேவரகசியமாகும்.

ராமர் இங்கு சிவபூஜை செய்தபோது அவரைப்பிடித்த பிரம்மஹத்தி தோஷம் (கொலை செய்த பாவம்) விலகியது. அந்த தோஷம் எங்கு



# அழிக்கப்படும் மிதக்கும் பாறைகள்

இராமேஸ்வரம் முழுவதும் பல இடங்களில் மிதக்கும் பாறைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஒருசில இடங்களில் இப்பாறைகளை உடைத்து சிறு பகுதிகளை விற்பனையும் செய்கின்றனர். 200ரூபாய் முதற்கொண்டு 5,000, 10,000 என்று பாறைகளின் அளவிற்கு ஏற்ப விற்கப்படுகின்றன, இந்த பாறையின் சிறு துண்டுகள் வீட்டில் இருந்தால் நன்மை தரும் என்று ஏமாற்றி விற்கின்றனர். ஒருசில பக்தர்களும் இதை நம்பி அக்கற்களை விலை கொடுத்து வாங்கி செல்கின்றனர்.

இதில் எள்ளளவும் உண்மையில்லை. ஒருசிலர் கடலுக்கு சென்று தற்போதுள்ள பாறைகளை சட்டவிரோதமாக உடைத்து, விற்பனை செய்கின்றனர். இந்நிலை தொடர்ந்தால் ராமர் பாலம் முழுவதும் சேதமடையும் நிலை உருவாகும். எனவே இராமேஸ்வரம் செல்லும் பக்தர்கள் இதுபோன்ற பாறைகளை வாங்குவதை தவிர்த்தல் நன்மை தரும்.

இராமபிரானும், வானரக் கூட்டமும் ஒரு கெட்ட சம்பவத்தை வேறருக்க, மிதக்கும் பாறைகளின் துணையுடன் இலங்கை சென்றனர். இராவண வதம் முடிந்து கொடிய பாவத்துடன் இராமேஸ்வரத்தில் சிவலிங்க பிரதிஷ்டை செய்தபின் அவர்கள் பாவம் போக்கிக் கொண்டதாக வரலாறு.



எனவே இந்த பாறைகளுக்கும் அந்த தோஷத்தில் பங்குண்டு, அவ்வாறிருக்க, அந்தப் பாறைகளை வீட்டிற்கு வாங்கிச் செல்வது ஏதேனும் தோஷத்தை உண்டு பண்ணக்கூடும். எனவே இந்த பாறையை பார்ப்பதுடன், வணங்கி செல்வதே சிறப்பு.

செல்வதென தெரியாமல் திணறியது. அதனால் வேறு யாருக்கும் பாதிப்பு உண்டாகாமல் இருக்க, சிவன் பைரவரை அனுப்பினார். அவர் பிரம்மஹத்தி தோஷத்தை தன் திருவடியால் அழுத்தி, பாதாளத்தில் தள்ளினார். பின்னர் இத்தலத்திலேயே அமர்ந்து, இங்கு வரும் மனம் திருந்திய பக்தர்களின் கொடிய பாவங்களைப் பாதாளத்துக்குள் தள்ளுபவராக அருள் செய்கிறார். இவருக்கு “பாதாள பைரவர்’ என்று பெயர். இவரது சன்னதி கோடிதீர்த்தம் அருகில் உள்ளது.

இந்த பைரவரை வழிபட்டால் கொடிய தோஷமான பிரம்மஹத்தி தோஷம் (கொலை செய்த பாவம்) வறுமை, நோய் யாவும் உடனடியாக அகலும்.

இராமேஸ்வரம் கோவிலுக்கு செல்பவரகள் பல நூறு வருடங்கள் பழமையான நீலேஸ்வரர் லிங்கம்., உப்புக்கல்லால் செய்யப்பட்ட உப்பு லிங்கம், சேது மாதவர் சன்னிதி மற்றும் பாதாள பைரவர் ஆகிய சன்னிதிகளுக்கு சென்று தரிசித்து முழு பயன்பெறுங்கள் தெரியாதவர்களுக்கு தெரியபடுத்துங்கள்.



ஆன்மிகமலர் மெயில் புக்



மாதம் தோறும் இரண்டு இதழ்களாக (இ-புக் வடிவில்) வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும் இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள், மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள் படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

மேலும் தகவலுக்கு 8825844033 என்ற வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்

# நான்கு வகை மக்கள்

பல ஆண்டுகளுக்கு முன் வராகநகரிலிருந்து ஓர் இளைஞன் அடிக்கடிவந்து கொண்டிருந்தான். வயது இருபது இருக்கலாம். கோபால் சேன் என்பது அவனுடைய பெயர். இங்கே வந்தால் போதும், அவனுக்குப் பரவசநிலை அதிகமாகிவிடும். அவன் கீழே விழுந்து கைகால்களை ஒடித்துக் கொள்ளாமல் இருப்பதற்காக ஹிருதயன் அவனைப்பிடித்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

அந்த இளைஞன் ஒரு நாள் என் காலைப் பிடித்துக்கொண்டு, நான் இனிமேல் இங்கே வர முடியாது. நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டுச்சென்றான்.

சில தினங்களுக்குப்பிறகு அவன் உடலை விட்டு விட்டான் என்று கேள்விப்பட்டேன்.

மக்களின் நான்கு வகை உண்டு என்று சொல்லப்படுகிறது. அவர்கள் **பக்தர்கள், முமுட்சுக்கள், முக்தர்கள், நித்தியர்கள்.**

உலக வாழ்க்கை ஒரு வலை போன்றது. மக்கள் மீன்கள், சொந்த மாயையால் இந்த உலகைப்படைத்த இறைவன் மீனவன்,

வலையில் மாட்டிக்கொள்பவற்றுள் சில மீன்கள் வலையை அறுத்துக்கொண்டு தப்பிக்க. அதாவது முக்தி பெறமுயல்கிறது.

இவற்றை முமுட்சுக்களுக்கு ஒப்பிடலாம்.

தப்ப முயல்பவை எல்லாமே தப்ப முடிவதில்லை. இரண்டொரு மீன்கள் தபாங் என்ற சத்தத்தோடு தப்புகின்றன. அப்போது அருகிலுள்ளவர்கள், பார்த்தாயா, அந்தப்பெரிய மீன் தப்பி விட்டது. என்று பேசிக்கொள்வார்கள்.

இப்படி தப்பிக்கின்ற இரண்டொருவர்தான் முக்தர்கள்.

சில மீன்கள் இயல்பாகவே எச்சரிக்கையாக இருக்கும். அவை ஒரு போதும் வலையில்அகப் பட்டுக்கொள்வதில்லை. நாரதர் போன்ற நித்தியர்கள் சம்சார வலையில் அகப்படுவதே இல்லை.

ஆனால் பெரும்பாலான மீன்கள், வலையில் சிக்கிக் கொள்கின்றன. நாம் வலையில் அகப் பட்டுக் கொண்டிருக்கிறோம், நாம் இறக்க நேரிடும், என்ற எண்ணமும் அவற்றிற்கு இல்லை. வலைக்கயிற்றைப் பற்றிக்கொண்டே இங்குமங்கும் நீந்துகின்றன. தண்ணீரில் அடியில் சென்று சேற்றில் மறைந்து கொள்ள முயல்கின்றன. தப்புவதற்கு எந்த முயற்சியும் செய்வதில்லை. சொல்லப்போனால் இன்னமும் நன்றாகச்சேற்றில் அழுத்திக்கொள்கின்றன. தாங்கள் அங்கே சுகமாக இருப்பதாக நினைத்துக் கொள்கின்றனர்.

பத்தர்கள் உலகியலில் அதாவது காமினீ காஞ்சனத்தில் பற்றுக்கொண்டிருக்கின்றனர். அழுக்குக் கடலில் மூழ்கிக் கிடக்கின்றனர். ஆனால் சுகமாக இருப்பதாக நினைக்கின்றனர்.

முமுட்சுக்களும் முக்தர்களும்உலகியல் வாழ்க்கையைப் பாழுங்கிணறாக நினைக்கிறார்கள். அது அவர்களுக்குப் பிடிப்பதில்லை. அதனால் தான் சிலர் ஞானம் அடைந்த பிறகு, இறையனுபூதிக்குப் பிறகு உடலை விட்டு விடுகின்றனர். ஆனால் இப்படி உடலை விடுவது எளிதான காரியமல்ல.

பத்தர்கள் அதாவது உலகியல் மனிதர்கள் எந்த வழியிலும் விழிப்புணர்வு பெறுவதில்லை.

எத்தனை துன்பங்கள், எத்தனை அதிர்ச்சிகள், எத்தனை ஆபத்துக்கள்! எனினும் அவர்களுக்குப் புத்தி வருவதில்லை.

ஒட்டகம் முட்செடியை விரும்பித்தின்னும். தின்னும்போது வாயிலிருந்து ரத்தம் பீறிடுகிறது. இருந்தாலும் அது முடிசெடியைத்தான் தின்னும். விடாது. உலகியல் மனிதர்களும் எத்தனையோ துன்பங்களுக்கும் ஏக்கங்களுக்கும் உள்ளாகின்றனர்.

இருந்தாலும் சில நாட்களுக்குப் பிறகு பழைய கதை தான். துணை இறந்து விடுகிறாள் அல்லது தங்கள் துணைக்கு துரோகம் செய்து விடுகிறது. இதற்குப் பிறகும் மற்ற துணை மறுமணம் செய்து கொள்கிறது.

அதேப்போன்று வீட்டில் இறப்பு நடந்து விட்டால் எவ்வளவு துக்கம்! ஆனால் சில நாட்களுக்குள் எல்லாம் மறந்து போகின்றன!

இறப்பால் இழந்த உறவுகளோ சில நாட்களுக்குப் பிறகு அதை மறந்துவிட்டு அன்றாட வாழ்க்கையில் திளைக்கின்றனர்.

பெற்ற வாரிசுகளுக்கு திருமணம் காரணமாகச் சொத்துக்கள் அனைத்தையும் இழக்கின்றனர், அப்படியிருந்தும் ஆண்டு தோறும் குழந்தைகளைப்பெற்றெடுக்கின்றனர்.

சிலவேளைகளில் உலகியல் மனிதனின் நிலைமை எலியைப் பிடித்த பாம்பின் நிலைமையாக உள்ளது. விழுங்கவும் முடிவதில்லை, விடவும் முடிவதில்லை. உலக வாழ்க்கையில் எந்த சாரமும் இல்லை என்பதை பத்தர்கள் ஒரு வேளை அறிந்து கொள்ளலாம். இருந்தாலும் அதை அவர்கள் விட மாட்டார்கள்.

மரிமாங்காய் பழத்தில் இருப்பதெல்லாம் வெறும் தோலும் கொட்டையும் தான். இருந்தாலும் அதை எறிந்து விடுவதில்லை.

உலகியல் மனிதனால் இறைவனிடம் மனத்தை செலுத்த முடிவதில்லை. பலருக்கு இறைவனின் திருநாமத்தைச்சொல்ல இன்னும் வேளை வரவில்லை போலும்!

உலகியல் மனிதனை அறிந்து கொள்வதற்கு மற்றோர் அடையாளமும் இருக்கிறது. அவனை உலகியல் வாழ்விலிருந்து பிரித்து, நல்ல இடத்தில் வைத்தால் ஏக்கத்தால் செத்தே போவான்.

மலத்தில் இருக்கும் புழு அங்கேயே ஆனந்தமாக உள்ளது. அதையே உண்டு கொழுத்து வளர்கிறது. அந்தப் புழுவை எடுத்து நல்ல இடத்தில் வைத்தால், இறந்து போகும்.

– ஸ்ரீராமகிருஷ்ணரின் கதைகள்,
உவமைகள் பாகம்–19



# இழந்த பார்வையை மீட்க வழி சொன்ன பெரியவா

சென்னை நுங்கம்பாக்கத்தில் ஒரு பொறியாளர், எல்லாப் புலன்களும் ஒழுங்காக இருந்ததால், படித்துப் பட்டம் பெற்று பதவியும் பெற்றார். இடையில் இப்படி ஓர் இடி.

பார்வை போய்விட்டது; மருத்துவர்கள் மருந்து போட்டார்கள். ஆனால், போன பார்வை மருந்துக்குக் கூட வரவில்லை.

மகாஸ்வாமிகள் சென்னையில் முகாம்.

பொறியாளாரால் சுவாமிகளைப் பார்க்க முடியாது தான். ஆனால்,சுவாமிகளின் தெய்வீகக் குரலை கேட்க முடியுமே! செவிப் புலன் பழுதபடவில்லையே? அத்துடன், சுவாமிகளால் இவர் பார்க்கப்பட முடியும்...

நாள் தவறாமல், ஆறுமாத காலம், பெரியவாள் பூஜைக்குச் சென்று கொண்டிருந்தார்.பொறியாளர் வரிசையில் நின்று, தினமும் தீர்த்தப் பிரசாதம் பெற்றுக் கொள்வார்.

உதவிக்காக உடன் வருபவர்கள்,'பெரியவாள் அனுக்ரஹம்ப ண்ணணும்' என்று மெய்யுருகப் பிரார்த்திப்பார்கள்.

மற்ற எல்லா அடியார்களுடனும்பேசும் தெய்வம் இவருக்கு மட்டும் பதில் சொன்னதில்லை;



வேதனை,இல்லை,பரிசோதனையா?பத்து நாட்கள் பயங்கரமாகப் போர் செய்யாமலே இராவணனை இராமபிரான் மாய்த்திருக்க முடியாதோ? ஆனால், அவனுக்கு உயிர் போகும் நொடி வரும்வரை, காலத்தை கடத்த வேண்டியிருந்தது.

கட்டுமானப் பொறியாளருக்குக் கண் பார்வை கிடைக்க வேண்டிய புண்ணியதருணம் வந்து விட்டது போலும்.

ஒருநாள், தேவார இசைப்பணிபுரியும் காஞ்சிவரத ஓதுவார் என்ற அடியார், பெரியவாள் தரிசனத்துக்கு வந்திருந்தார்.

பார்வையில்லாத பொறியாளரை அருகில் வைத்துக்கொண்டு, ஓதுவாருடன் ஒரு சம்பாஷணை.

பெரியவாள் கேள்வி: சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கண்பார்வை ஏன் போனது?

ஓதுவார் விடை: இறைவனுக்குக் கொடுத்திருந்த வாக்கைத் தவறினார்.

"எந்த ஊரில் பார்வை இழந்தார்?"

"திருவொற்றியூர் காலடிப்பேட்டை."

"பிறகு என்ன செய்தார்?"

"அவ்விடத்திலிருந்து, திருமுல்லைவாயில் சென்று, 'அழுக்கு மெய்கொடுதிருவடி அடைந்தேன்' என்ற பதிகம் பாடி விண்ணப்பம் செய்தார்.'

"அடுத்ததாக என்ன செய்தார்?"

"திருவெண்பாக்கம் என்ற தலத்துக்குச் சென்று, பதிகம் பாடினார். இறைவன் சிறிது கருணை காட்டி ஊன்றுகோல் அருளினார்."

"அப்புறம்?"

"காஞ்சிபுரம் சென்று ஏகம்பனை வேண்டினார். ஆலந்தான் உகந்து... என்ற பதிகம் பாடி, இடது கண் பார்வை பெற்றார். அருகிலேயுள்ள ஓணக்காந்தன் தளி திருக்கோவிலுக்குச் சென்று, பொருள் பெற்றார். பின்னர் காஞ்சிப்பகுதியிலேயே உள்ள திருமேற்றளி அனேகதங்காவதம் சென்று கயிலயங்கிரி நாதனைத் துதித்தார்.

"அடுத்து?"

"திருவாரூர் சென்றார். மீளா அடிமை... என்று தொடங்கும் பதிகம் பாடி, புற்றிடங்கொண்டானை வழிபட்டு,உருகி,உருகி வேண்டினார். வலதுகண் பார்வையும் பெற்றார்...."

மௌனம்.

"பரமேஸ்வரன் அனுக்ரஹத்தாலே பார்வை கிடைக்கும். இல்லையா?"

"ஆமாம்"

பொறியாளரைக் கூப்பிட்டு,'சுந்தரமூர்த்தி சுவாமிகள் போன ஸ்தலங்களுக்கெல்லாம், இந்த ஓதுவாரையும் அழைச்சிண்டு போ. அந்தந்த ஸ்தலங்களுக்கான பதிகங்களை இவர் பாடுவார்.

"சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுக்கு ஊன்றுகோல் கொடுத்த ஈஸ்வரன் புரசவாக்கம் கங்காதரேசுவரர் கோவிலில் இருக்கார். முதல்லே, ஓதுவாருடன் போய், அவரை தரிசனம் பண்ணு; அர்ச்சனை செய்... முக்கண்ணன் அருளினால் பார்வை கிடைக்கும்...."

மகாப்பெரியவாளின் ஆணைப்படி யாத்திரை நடந்தது. பெரியவாள் வாக்குப்படி பலனும் கிடைத்தது.




புரசவாக்கம் கங்காதரேசுவரர் கோவில்





www.aanmeegamalar.com

# உயிர் பிரியும் உடல் பாகங்கள்

## அகத்தியர் கூறிய வழிமுறை

மனிதர்கள் செய்த பாவ புண்ணியத்திற்கு கிடைக்கும் பலனை பல்வேறு வகையில் இந்து தர்மங்கள் வகுத்துள்ளன.

வாழும்போது மட்டுமின்றி மனிதர்கள் இறக்கும் தருவாயில் கூட, செய்த பாவ புண்ணியத்திற்கு ஏற்ப மனிதர்களின் உயிர் பிரியும் வழிமுறைகளையும் வகுத்துள்ளனர் நமது முன்னோர்கள்.

அகத்தியர் தனது கர்ம காண்டம் நூலில் விளக்கமாக விவரித்து கூறியுள்ளார்.

செய்யும் பலனுக்கு ஏற்ப உயிர் பிரியும் உடல் பாகத்தின் வாசல் வழியாக அகத்தியர் கூறியதை பார்ப்போம்.

- பழி பாவம் செய்தவர்களுக்கு மலத்துடன் மல வாசல் வழியாக பிரியும். இவை நேரே நரகத்திற்க்கு செல்லும் திரும்ப மறுபிறவி கிடைக்க நாளாகும் வந்தாலும் நல்ல பிறவி கிடையாது.
- பாவம் செய்தவர்களுக்கு நீர் வாயில் வழியாக உயிர் பிரியும் இந்த உயிர்கள் மறுபிறப்பில் காமியாய் திரியும்.
- பாவம் நிறையவும், புண்ணியம் குறைவாகவும் செய்த உயிர்கள் நாபி வழியே பிரியும். இந்த உயிர்கள் மறுபிறப்பில் விருப்பமுள்ளவனாகவும், நோயாளியாகவும், அங்ககீனமுடையதாகவும் பிறந்து வினையை கழிக்கும்.
- பாவம் புண்ணியம் சமமாக செய்தவர்களின் உயிர்கள் வாய் வழியாகப் பிரியும். இவை மறுபிறப்பில் உணவுப் பிரியர்களாகவும் சாப் பாட்டு ராமர்களாகவும் பிறப்பார்கள்.



- இடது, வலது நாசிகள் வழிய தனித் தனியாக பிரிந்த உயிர்கள் அதிக பாவம் செய்யாத உயிர்கள். இவை மறுபிறப்பில் நற்மணத்தையே விரும்பும்...
- இடது, வலது செவிகள் வழியாக பிரிந்த உயிர்கள் மிகவும் சிறி தளவே பாவம் செய்த உயிர்கள். இவை மறுபிறப்பில் கேள்விச் செல்வம் உடையதாக பிறக்கும். முக்தி தேடி முயற்ச்சிக்கும்.
- இடது, வலது கண்கள் வழியாக பிரிந்த உயிர்கள் மிகவும் புண்ணியம் செய்த உயிர்கள். இவை மறுபிறப்பில் கல்வி செல்வம் முதலியன பெற்று உயர்வுடன் வாழும். இவைகளும் முக்தி தேடி முயற்ச்சிக்கும்.... பழி பாவத்தைக் கண்டு அஞ்சி வாழும்... குருபக்தி கடவுள் பக்தியுடன் வாழும்...
- சிவயோக நெறியில் இருக்கும் உயிர்கள் பிராரப்த கர்மங்களை தனக்கு கொடுக்கப்பட்ட உடல் கொண்டு கழித்து, பல காலங்கலாகப் பழகிய யோகப் பயிற்சியை துணை கொண்டு சுழுமுனை நாடிவழியாக பிராணனை மேல் எழுப்பி, பிரமாந்திர வழியை திறந்து கபால வழியாக ஒளிமயமாக உச்சி வாசலூடாக செல்லும். அவ்வாறு சென்ற உயிர் மீண்டும் பிறவாது.


ஆன்மிகமலர் மெயில் புக்

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# சாபம்

அந்த கால முனிவர்களில் பலர் சாபம் கொடுப்பவர்களாக இருந்திருக்கிறார்கள் படை பலம் மிகுந்த அரசர்களே முனிவர்களின் சாபத் திற்கு அஞ்சி நடுங்கி இருக்கிறார்கள்

சாபம் என்பது என்ன? அதற்கு ஏன் அவ் வளவு தூரம் பயப்பட வேண்டும்? என்று நமக்கு தோன்றும்.

இந்த கேள்வியை பெரியவர்களிடம் கேட்டால் நல்லவர்களை பக்திமான்களை தவத்தில் உயர்ந்த வர்களை கோபம் அடையும் படி செய்தால் அவர்கள் கோபம் கொண்டு சொல்லுகின்ற வார்த் தைகள் அப்படியே பலித்து விடும் அது தான் சாபம் என்று விளக்கம் தருகிறார்கள்

இந்த விளக்கம் சரியானது போல் தோன்றி னாலும் முழுமையானதாக ஏற்று கொள்ள முடியவில்லை அதற்கு காரணம் பக்திமான்களும் தவ சிரேஷ்டர்களும் மனதை அடக்கியவர்கள் மனம் அடங்கினால் காம குரோத எண்ணங்கள் தானாக அடங்கி விடும்.

நிலமை அப்படி இருக்க இவர்களுக்கு கோபம் வருகிறது என்றால் அவர்களை எப்படி ஆன்மிகத்தில் உயர்ந்தவர்களாக கருத இயலும்?

அதனால் பெரியவர்கள் சொல்லும் விளக்கப் படி கோபம் கொள்ள செய்தால் சாபம் கிடைக்கும் என்பது தவறான கருத்தாகும் உண்மையில் சாபம் என்பதற்கும் கோபம் என்பதற்கும் தொடர்பே இல்லை

நாம் சாதரணமாக பேசுகின்ற போது நமது வார்த்தைகள் தொண்டையில் இருந்து வெளிப்படுவது போல் தோன்றினாலும் அது முற்றிலுமாக அங்கே இருந்து வருவது இல்லை

அடிவயிறு மார்பு மற்றும் தொண்டையில் இருந்து கிளம்புகின்ற உத்வேகம் தான் வார்த்தைகளாக வெளிவருகிறது ஒரு வார்த்தை எதிலிருந்து கிளம்புகிறதோ அதை பொருத்து அந்த வார்த்தைக்கு வலிமை வந்தமைகிறது

உதாரணமாக அன்றாட நடப்புகளை பேசு கின்ற போது நமது மனம் நாலாவிதமான சிந்தனை களுக்கு ஆட்பட்டு கிடக்கிறது அதனால் வாய் ஒன்றை பேசினாலும் மனது மற்றொன்றில் இருக்கிறது இந்த பேச்சில் ஆழமிருக்காது அவ் வளவாக அர்த்தமும் இருக்காது இதனால் எந்த பயனும் இருக்காது

நாம் ஆசை வசப்படும் போது எதையாவது ஒன்றை எதிர்பார்த்து பேசும்போது அந்த வார்த் தைகள் மார்பிலிருந்து கிளம்புகிறது

இதில் தடுமாற்றம் இருந்தாலும் குறிக்கோளை அடைகின்ற உறுதி இருக்கும் இத்தகைய உறுதி மிக்க வார்த்தைகள் எப்போதெல்லாம் நம்மிட மிருந்து புறப்படுகிறதோ அப்போதெல்லாம் நாம் எதிர் நோக்கும் காரியங்கள் ஓரளவு வெற்றி யாகவே முடியும்

ஒவ்வொரு மனிதனுக்கும் எதாவது ஒரு சமயத்தில் தான் அடிவயிற்றில் இருந்து அதாவது நாபியில் இருந்து வார்த்தைகள் புறப்படுகின்றன

அதிகமான சந்தோசமோ சோகமோ அல்லது இவைகளை போன்ற உணர்ச்சி பொங்கும் சூழலில் தான் இங்கே இருந்து சொற்கள் பிறக்கின்றன

அப்படி பிறக்கின்ற சொற்கள் மந்திரமாகவே ஆகி விடுகிறது அந்த சொல் எதை நோக்கி பிரயோகம் செய்யப்படுகிறதோ அங்கே அது நிச்சயமாக பலித்து விடுகிறது அல்லது செயலாக நடந்து விடுகிறது

இப்படி நாபிலிருந்து புறப்படுகின்ற வார்த் தை தான் அமங்கலமாக இருந்தால் சாபம் என்றோ மங்களமாக இருந்தால் வரம் என்றோ அழைக்கப்படுகிறது

எனவே முனிவரின் வார்த்தைகள் சாபமாக வரமாக இருப்பதற்கு இது தான் மூலக்காரணமாக இருக்கிறது

இப்படி நாபியிலிருந்து சாதாரண



**நாபிலிருந்து புறப்படுகின்ற வார்த்தை அமங்கலமாக இருந்தால் சாபம் என்றும் மங்களமாக இருந்தால் வரம் என்றும் அழைக்கப்படுகிறது**

மனிதர்களுக்கு அடிக்கடி சொற்கள் பிறக்காது முறைப்படி மூச்சி பயிற்சி செய்தவர்களுக்கே இது அவ்வபோது சாத்தியமாகும்

அதனால் தான் எதிரியின் ஆயுதபடைக்கே அஞ்சாத அரசர்கள் முனிவர்களின் சாபங்களுக்கு பயந்தனர் முனிவர்களும் அர்த்தம் இல்லாமல் சுய நலத்திற்காக யாரை வேண்டுமானாலும் சபிப்பது இல்லை

இது முனிவர்கள் மகான்கள் சம்பந்தப் பட்ட விஷயம் நாம் சாதாரண மனிதர்களின் வாழ்க் கையில் எதிர்கொள்ளும் சாபங்களை பற்றி சற்று சிந்திப்போம்.

எனக்கு தெரிந்த ஒரு குடும்பத்தில் பெண் குழந்தைகள் யாருமே சந்தோசமாக வாழ்ந்தது இல்லை,

அந்த குடும்பத்தில் உள்ள பெண்கள் வயதுக்கு வரும்வரை சாதரணமாக தான் இருப்பார்கள் அதன் பிறகு மனநிலை பாதிப் படைந்தவர் போல் சில காலம் இருப்பார்கள்

சிலர் தற்கொலை செய்து கொள்வார்கள் திருமணம் முடித்து கொடுத்தால் கூட கணவனோடு வாழ மாட்டார் கள் அல்லது அமங்கலியாகி விடுவார்கள்.

கணவனோடு நல்லவித மாக வாழ்ந்தால் குழந்தை இருக்காது இப்படி எதாவது ஒரு குறை அந்த குடும்ப பெண்களுக்கு தொடர்ச்சியாக இருந்து வந்தது

இதற்கு காரணம் என்ன என்று பெரியவர்களை கேட்டால் அந்த குடும்பத்தை, ஒரு பெண்ணின் சாபம் வாட்டிவதைப்பதாக சொல்கிறார்கள்

அவர்களின் முன்னோரில் ஒருவர் காட்டு வழியாக வந்த ஒரு பெண்ணின் நகைக்கு ஆசைப்பட்டு அவளை கொன்று கருவேல முள் ளிற்குள் வைத்து கதற கதற எரித்து விட்டாறாம்.

திருமண வயதுடைய பெண் ணை கொலை செய்ததினால் அந்த பெண்ணின் பாவமும் சாபமும் இன்றும் தொடர்கிறது என்கி றார்கள்.

இப்படி எத்தனையோ குடும்பங்களை நாம் காண முடிகிறது நல்ல வசதியோடு வாழ்வார்கள் அரண்மனை வாசிகளை போல அதிகாரம் செலுத்துவார்கள் ஆனால் ஐம்பது வயதை தொடுவதற்குள் எதோ ஒரு விதத்தில் மரணம் அடைந்து விடுவார்கள் இது தொடர்ச்சியாகவும் சில குடும்பங்களில் நடந்தும் வருகிறது.

இன்னும் சில குடும்பத்திலோ விசித்திரமான பல சம்பவங்கள் காரண காரியம் இல்லாமலே நடை




பெரும் இவைகளை எல்லாம் சாபங்களால் வந்த வினை என்றும் சொல்கிறார்கள்

முனிவர்கள் சாபம் கொடுக்கலாம் அதை போலவே சாதாரண மனிதர்களும் சாபம் கொடுக்க முடியுமா?

முனிவர்களை போலவே சாதாரண மனிதர்களும் நாபியிலிருந்து வார்த்தைகளை வெளிப்படுத்தினால் தானே அது சாபமாகும்?

வெந்ததை தின்று வேளை வந்தால் சாகும் சாதாரண மனிதனுக்கு கூட நாபியிலிருந்து வார்த்தைகள் வருமா? என்று சிலர் நினைக்க கூடும்,

நமது இந்து மத ஞானிகள் யோக பயிற்சி செய்து பெறுகின்ற சித்துக்களை உண்மையான பக்தியின் மூலமும் பெறலாம் என்கிறார்கள்.

அதாவது யோகாப்பியாசம் என்பது வெற்றி அடையும் போது மனதை குவிய செய்து விடுகிறது அதன் மூலம் சித்துக்கள் வந்தமைகிறது அதே போலவே உணர்வுகள் மிக கூர்மையாகி குவியும் போது மனதும் ஒரு நிலைப்பட்டு விடுகிறது

அதாவது பக்தி காதலாகி கசிந்துருகி கண்ணில் நீர் மல்க நிற்கும் போது மனம் குவிந்து சித்துக்கள் கைவந்து விடுகிறது



இதே போலதான் ஒரு சாதாரண மனிதன் இன்னொரு மனிதனால் தேவையற்ற முறையில் அல்லது அதர்ம வழியில் தாக்கப் படும் போது தன்னையும் மீறிய சோகத்திற்கு ஆட்படுகிறான்.

அந்த நேரம் அவன் மனது கடந்த காலம் எதிர்காலம் ஆகிய இருகாலங்களையும் மறந்து நிகழ்காலத்திலேயே நிலைத்து விடுகிறது

சுற்று புற சூழல்கள் அனைத்தும் மறந்து தனக்கு ஏற்பட்ட அதர்மத்தை மட்டுமே நினைத்து நினைத்து மனம் உருகி ஒரு நிலைப் பட்டுவிடுகிறது, அப்போது அவனிடமிருந்து வருகின்ற வார்த்தை அடிவயிற்றில் இருந்து ஒரு ஓநாயின் ஓலம் போல வெளிப்பட்டு எதிராளியை தாக்குகிறது, எதிரியை மட்டும் அல்ல எதிரின் வம்சத்தை கூட தாக்குகின்ற அளவிற்கு அந்த வார்த்தை சத்திமிகுந்த சாபமாகி விடுகிறது.

இதனால், பல தலைமுறைகள் காரணமே இல்லாத சோதனைகளை சந்தித்து வாழ்வில் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலை உள்ளது.

பாட்டன் முப்பாட்டன் செய்த பாவத்திற்கு ஒன்றுமே அறியாத வாரிசுகள் கஷ்டங்களை அனுபவிக்கலாமா? இது சாத்தியமா? அவர்கள் பெற்ற சாபம் நம்மை எப்படி தொடரும்? என்று சிலர் கேட்கலாம்,

முன்னோர்களால் பெற்ற சாபம் ஒரு தனிமனிதனை வாட்டுகிறது என்றால் அவனவன் ஜாதகப்படிதான் நல்லது கெட்டது நடக்கிறது என்று சொல்வது எப்படி பொருந்தும் என்றும் சிலர் கேட்கலாம்.

எனது பாட்டனார் ஒரு சாபத்தை பெற்றார் என்றால் அதன் தாக்கம் அவர் மனதிலும் ஆத்மாவிலும் பரிபூரணமாக ஆக்ரமித்து இருக்கும் அது மரபு தொடர் வழியாக என் தகப்பனாருக்கும் எனக்கும் என்மகனுக்கும் கூட சொந்தமாக வந்தமையும் இந்த வேளையில் என் ஜாதகமோ என் மகனின் ஜாதகமோ வலுவாக இருந்தால் தாக்கம் குறைவாக இருக்கும் வலுவற்று இருந்தால் அதன் தாக்குதல் அதிகப்படியாகவே இருக்கும்.

இன்னொரு விஷயம் ஒவ்வொரு மனிதனின் ஜாதகத் திலும் கிரகங்களின் பலன் என்பது அவனது பூர்வகர்மா அவனது முன்னோர்களின் கர்மா என்பதை பொறுத்தே அமைகிறது

அவனது நிகழ்கால சொந்த கர்மா நல்ல முறையில் அமைந்தால் கஷ்டங்களில் இருந்து சுலபமாக விடுபட வழிவந்தமயும் அல்லது அத்தகைய பூர்வ கர்மாவின் தாக்குதலை கிரகங்கள் இறக்கம் இல்லாமல் தருவதை குறைத்து கொள்ளவும் வழி கிடைக்கும்.

பொதுவாக நமது சித்தர்கள் இத்தகைய சாபங்களில் இருந்து விடுபட பல தான தர்மங்களையும் பூஜா விதிகளையும் சொல்லியிருந்தாலும் சில ரகசிய வழிகளையும் சொல்லியிருக்கிறார்கள்.

உதாரணமாக மூன்று தலை முறைக்கு முன்னால் இருந்து தாக்குகின்ற சாபத்தை நீக்க குருவரிகற்றாளை,வனபிரம்மி,முப்பிரண்டை,வெண்ணாவல் ஆகிய மூலிகைகளை மந்திர வழியில் பயன் படுத்தும் விதத்தை புலிப்பாணி சித்தர்,கோரக்கர் போன்ற மகா சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இதன் வழியில் செய்தால் நிச்சயம் ஓரளவாது சாபக் கொடுமையிலிருந்து குடும்பங்கள் மீண்டு வரலாம்.

இந்த மூலிகைகளை சிலருக்கு முறைப்படி செய்து கொடுத்திருக்கிறேன் அவர்கள் அதை பயன்படுத்தி மிக நீண்ட காலமாக அனுபவித்து வரும் துயரங்களிலிருந்து விடுப்பட்டு இருக்கிறார்கள்.

சாபத்தை மூலிகைகள் எப்படி நீக்கும் என்ற சந்தேகம் சிலருக்கு வருவது இயற்கை.

சாபம் என்பது வலுவான எண்ணங்களின் கூட்டு வடிவமாகும் இது பிரபஞ்ச ஆகர்சன சக்தி மூலம்தான் குறிப்பிட்ட மனிதனை வந்தடைகிறது.

அப்படி வருகின்ற எண்ண அலைகளை வலுவோடு தாக்காமலும் மாற்று வழியில் அனுப்பி வைக்கவும் மூலிகையில் உள்ள சில அபூர்வ சக்திகள் துணை செய்கின்றன அந்த சக்திகளே சாபத்திலிருந்து மனிதனை காப்பாற்றுகிறது.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்

போன்: 9442426434





கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து Aanmeega malar (mobile app) டவுன்லோடுசெய்து, செல்போனிலேயே நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
GET IT ON Google Play
www.aanmeegamalar.com

# குழந்தைகளுக்கு முன்னோர் பெயர் வைப்பதன் ரகசியம்



நமக்கும் நமது முன்னோர்களுக்குமான தொடர்ப்பு நகமும் சதையும் போன்றது இதை எவன் ஒருவன் புரிந்து கொண்டு வாழ் கிறானோ அவன் வாழ்வில் சுதந்திரமாக வும் மகிழ்ச்சியாகவும் வாழ்கிறான், எவன் ஒருவன் தனது முன்னோர்களை பற்றி நினைக்க வில்லையோ எவனுக்கு முன்னோர்களின் அருள் கிடைக்கவில்லையோ அவன் அடிமையாகவும் மூடனாகவும் வாழ்ந்து மடிகிறான்.

நமக்கு நம் முன்னோர்களின் அருளும் ஆசிர்வாதமும் கிடைக்க என்ன செய்யலாம் என்பதை பார்ப்போம்.

குழந்தைகளை வீட்டில் உள்ள தாத்தா பாட்டி கள் இடம் வளர விடுதல்:

குழந்தைகள் அவர்களின் தாத்தாபாட்டியின் கீழ் வளரும் போது நல்ல அறிவும் பக்குவமும் பெறுகின்றனர். இயற்கையாகவே அந்த குழந்தைகளுக்கு தங்களின் குடும்ப கலாச் சாரமும் பாரம்பரியமும் நாகரிகமும் தங்களது முன்னோர்கள் மூலம் கற்பிக்கப்படுகிறது. இவ்வாறு வளரும் குழந்தைகள் பிற்காலத்தில் இந்த சமுதாயம் மதிக்கும் அளவிற்கு நல்ல நிலையை அடைகிறார்கள்.இந்த குழந்தை கள் எந்த விதமான மோகங்களுக்கும் அடிமை யாகுவது யில்லை அதைபோல் யாரையும் அடி மையாக்கவும் நினைப்பதுயில்லை.

ஆகையால் தான் மக்களை அடிமை படுத்த நினைக்கும் கும்பலால் உருவாக்கப்பட்ட இந்த கல்விமுறையில் (மெக்கலே கல்விமுறை) கூட்டு குடும்பம் என்பது தவறு அது செலவை அதிகரிக்கும் நம்மால் சுகந்திர மாக செயல்பட முடியது போன்ற கருத்தியலை திட்ட மிட்டு பரப்பிவருகிறது.

அது மட்டும் இல்லாமல் தமிழனை அழிக்க நினைக் கும் இந்த திராவிட கும்பலின் முக்கியமான கொள்கையே முன்னோர்கள் முட்டாள்கள் அவர்கள் சொல்படி நடப்பது என்பது மூடதனம் போன்ற கருத்துகள் பரப்பப்பட்டுவருகிறது.

## முன்னோர்களின் பெயர்களை வைத்தல்

நாம் எதோ நாகரிகம் அடைந்துவிட்டோம் என்ற மனநிலையில் நாம் நமது குழந்தை களுக்கு வைக்கும் பெயர்கள் சில நேரம் நமக்கே புரிவதுயில்லை அந்த பெயரின் அர்த் தம் என்னவென்றும் தெரிவதுமில்லை.

நம் வாயில் கூட நுழையமுடியாத பெய ரை வைக்கிறோம். ஆனால் அதுனால் நமக்கோ நம் குழந்தைகளுக்கோ ஒரு பயனும் கிடைக்க போவதுயில்லை.அதுவே நம் குழந்தை களுக்கு நமது முன்னோர்களின் பெயர்களை சூட்டினால் அந்த பெயரை சொல்லி சொல்லி நாம் நமது குழந்தைகளை அழைக்கும் போதெல்லாம் நமது முன்னோர்களின் ஆசிர்வாதமும் அருளும் நம் குழந்தைகளுக்கு மட்டும் அல்லாமல் நம் குடும்பத்திற்கே கிடைக்கின்றன.

தொடர்ச்சியாக 5-ந்தில் இருந்து 6-தலைமுறை முன்வாழ்ந்த நமது முன்னோர்களின் பெயர்களை சூட்டுவதின் மூலம் நாம்நமது முன்னோர்களின் நினைவலை களை தக்கவைக்க முடியும்.

அந்த நினைவலைகள் நம் மையும் நம் குடும்பத்தையும் காத்தருளும். இந்த உண்மையை நம் முன்னோர் களும் நமக்கு முன் வாழ்ந்த மன்னர்களும் அரிந்த தால்தான் அவர்கள் ஒரு குறிப்பிட்ட பெயரை தங்க ளது பெயர்களுக்கு பின்பு வைத்துள்ளனர். (Surname or bloodline name) அந்த பெயரை தொடர்ச்சியாக பின்பற்றும் படி அவர்களின் வாரிசுகளுக்கும் அறிவுரை தந்துள்ளனர்.

இன்றும் ஒருசிலர் தங்க ளது பரம்பரை உறுப்பினர் களின் பெயரையே தங்கள் குழந்தைகளுக்கு சூட்டுகின் றனர். அவர்கள் தற்போது சமூகத்தில் உயர்ந்த நிலையில் உள் ளதை கண்கூடாக பார்க்கலாம், உதாரணத்திற்கு, அம்பானி குடும்பம், தமிழ் பத்திரிகையில் முன்னணியில் உள்ள தினத்தந்தி குடும்பத்தினர், தினமலர் குடும்பத்தினர், இது போன்று இன்னும் பல குடும்பத்தினர் வியாபாரத்திலும், தொழிலிலும்



மிகச் சிறந்த உயரத்தில் உள்ளனர்.

## முன்னோர் வழிபாடு

முன்னோர் வழிபாடு எனப்படும் குலதெய்வ வழிபாட்டின் சிறப்பை பற்றி சொல்லிகொண்டே போகலாம். நாம் சிவனை வணங்கலாம் விஷ்னுவை வணங்கலாம் ஏன் உலகில் உள்ள அனைத்து தெய்வத்தையும் வணங்கினாலும் நமக்கு முழு பலன் கிடைக்காது. தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்ற பழமொழிக்கு ஏற்ப நமக்கு ஒரு பிரச்சனை என்றால் முதலில் வந்து நிற்பது நம் குலதெய்வம் தான். நம் உயிரை எடுக்கும் எமன் கூட நம்குலதெய்வத்தின் அனுமதியின்றி நம் உயிரை எடுக்கமுடியாது.

ஆகையால் தான் நமக்கு பில்லிசூனியம் ஏவல் போன்ற விசையங்களை செய்பவர்கள் கூட முதலில் நம் குலதெய்வத்தை கண்டுப்பிடித்து அதை கட்டிப்போட்டபின்பே நமக்கு அவர்களால் ஏவல் போன்ற விசயங்களை செய்யஇயலும்.நம் குலதெய்வத்தின் அருள் நம்மீது பரிபூரணமாக இருக்கும் பச்சதில் அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது. ஜோதிட விதியின் படி எவன்


ஆன்மிகமலர் மெயில் புக்

> "தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்" என்ற பழமொழிக்கு ஏற்ப நமக்கு ஒரு பிரச்சனை என்றால் முதலில் வந்து நிற்பது நம் குலதெய்வம் தான்.

ஒருவனின் ஜாதகத்தில் குலதெய்வத்தின் குறை உள்ளதோ அவர்களால் வாழ்க்கையில் எந்த விதமான சுகபோகங்களையும் அனுபவிக் கமுடியாது.

அவர்கள் எடுத்த காரியத்தில் எல்லாம் தடைகளே முன்வந்து நிற்கும். குலதெய்வத்தின் அருள் இல்லாதவர்களுக்கே துர்மரணங்கள் ஏற்ப்படும் (அகாலமரணம்) என்கிறது ஜோதிடம். அதுமட்டும் இல்லாமல் நம் சந்ததி (குழந்தை பிறப்பதற்கு) வளர்வதற்கு காரணமே நம் குலதெய்வம் தான்.நாம் நமது குலதெய்வத்தை திருப்தி படுத்தாமல் 1000 சக்தி வாய்ந்த கோவிலுக்கு சென்று வந்தாலும் அதனால் ஒரு பலனும் இல்லை.

அது மட்டும் இல்லாமல் குலதெய்வத்தை அதற்குறிய கோவிலுக்கு சென்று வழிபடுங்கள் ஏன்னென்றால் இப்பொழுது நான் சொல்வதை கொஞ்சம் அப்படியே கற்பனை செய்து பாருங்கள் நாம் நமது குலதெய்வத்தை அதற்குறிய கோவில்களுக்கு சென்று வழிபடும் போது நமக்கு முன்பு அங்கு யார் வந்து வழிபட்டிருப்பார்கள் என்பதை நினைத்து பாருங்கள்.

நம் தந்தை, நம் தாத்தா, அவரின் தந்தை, அவரின் தாத்தா என நம் சந்ததி தொடங்கியது முதல் இன்று வரை உள்ள நம் முன்னோர்கள் அனைவரும் வந்து வழிபட்ட இடம் தான் நம் குலதெய்வகோவில்.

நாம் நம் முன்னோர்கள் அனைவரையும் பார்த்திருக்க வாய்ப்பில்லை ஆனால் அந்த கோவிலுக்கு சென்று அங்கே நிற்பது மூலம் நம்மால் அவர்களின் நினைவலைகளை உணரமுடியும். நான் எனது பாட்டான் நின்ற இடத்தில் நிற்கிறேன், நான் எனது பூட்டன் நின்ற இடத்தில் நிற்கிறேன், போன்ற எண்ணங்கள் நமக்கு பெரும் மகிழ்ச்சியை தரும். குலதெய்வ கோவிலுக்கு சென்று வழிபடும் போது நமக்கு நமது குலதெய்வத்தின் அருள் மட்டும் இல்லாமல் நமக்கு முன் வாழ்ந்த அனைத்து முன்னோர்களின் அருளும் கிடைக்கும்.

ஆகவே என்றும் முன் னோர்களின் பெயர்களை சூட்டி அவர்களின் நிழலி லேயே வளர்ந்து அவர்களை வழிபடுங்கள்.



– கோகுல மணிகண்டன்
சான்றார்
தொடர்பு எண்:
09677359474



# எதை எப்போது தரவேண்டும் கடவுளுக்குத் தெரியும்!



லட்சுமியும், சரஸ்வதியும் ஓரிடத்தில் இருப்பதில்லை என்பார்கள். திருவாரூரில் நடந்த சம்பவத்தைக் கேட்டால் இந்த உண்மை புரியும்.

திருவாரூர் தியாகராஜரின் முன் நடனமாடும் கமலம் என்பவள், தீட்சிதர் ஒருவரிடம் பாட்டு கற்று வந்தாள்.

தீட்சிதரின் வீட்டில் வறுமை தாண்டவம் ஆடியது. செய்வ தறியாத தீட்சிதரின் மனைவி, கமலத்திடம் வருந்தியதோடு, "உன் னால் உதவ முடியுமா?" என்று கேட் டாள்.

கமலம் தன் தங்க வளையலை அடகு வைத்து கொடுப்பதாக ஆறுதல் சொன்னாள்.

இருவரும் பேசிக் கொண்டது தீட்சிதர் காதில் விழுந்தது.

அதிர்ச்சியுடன், "அம்மா! நீ வளையலை விற்றுத் தந்தாலும் பிரச்னை தீராது. மேலும், ஒரு மாணவியின் வளையலைப் பறித்தவன் என்ற கெட்ட பெயரும் எனக்கு உண்டாகும்! நம் அனைவரையும் காப்பவர் நம்மூரில் குடியிருக்கும் தியாகராஜர் தான்! அந்தப் பெருமானிடம் முறை யிடுகிறேன். அவர் என்னை கைவிட மாட்டார்" என்று சொல்லி கோயிலுக்குப் புறப்பட்டார்.

மனம் உருகி தியாகராஜரைப் பாடி விட்டுத் திரும்பினார்.

வீட்டு வாசலில் ஆச்சரியம் காத்திருந்தது. ஆட்கள் மளிகைச் சாமான்களை வண்டியில் இருந்து இறக்கிக் கொண்டிருந்தனர்.

அவர்களிடம் விசாரித்த போது,

"ஐயா! தஞ்சாவூரில் இருந்து அரசு அதிகாரி ஒருவர் திருவாரூர் வர இருந்தார். அவருக்கு விருந்து அளிக்க அதிகாரிகள் மளிகைப் பொருட்கள் வாங்கினர். ஆனால், அவரது வருகை ரத்தாகி விட்டது. உத்தமரான உங்களுக்கு அதைக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும் என அதிகாரிகள் கொடுத்தனுப்பினர்" என்றனர்.

"தியாகராஜப் பெருமானே! எல்லாம் உன் மகிமை!" என்று மனம் உருகினார் தீட்சிதர். அவரே சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதர். யாருக்கு எப்போது என்ன தர வேண்டும் என்பது கடவுளுக்குத் தெரியும்!

# முக்தியடைந்த மகான்கள் உலகை எவ்வாறு கண்காணிக்கின்றனர்

68
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

ஸ்ரீ குருதேவர் அருளுகிறார்: “தலைசிறந்த மகான்களின் வழிகாட்டுதலை தற்போது உலகம் இழந்து விட்டதோ என நீங்கள் சில சமயங்களில் வியந்திருக்கக்கூடும். ஆனால், அவ்வாறு இல்லவே இல்லை. இறைவன் எவ்வளவு மும்முரமாக இருக்கின்றான் என்று பாருங்கள்:

அவன் எப்பொழுதும் தனக்கே உரிய பரவசத்தில் இருக்கின்றான். இருப்பினும் அவன் இந்தப் பிரபஞ்சத்தை இயக்குவதில் மும்முரமாக இருக்கின்றான். மேலும் இப்பூமியை விட்டுச் சென்ற அனைத்து மகான்களும் குருமார்களும் கூட இங்கிருந்தபொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் செயலாற்றுவதற்கு சில விஷயங்கள் இருந்ததைப்போலவே வேறு இடங்களில் மும்முரமாக இருக்கின்றனர். சந்தேகப்படும் சில நண்பர்களைத் திருப்திப்படுத்த லாஹிரி மகாசயர் முதல்முறை பாபாஜியை காட்சிதர அழைத்ததை பாபாஜி விரும்பவில்லை. “லாஹிரி, இந்த அற்ப விஷயத்திற்காகவா நீ என்னை அழைக்கிறாய்?” நான் மிகவும் மும்முரமாக இருக்கிறேன் என்று பொருட்படும் வண்ணம் “என்னைப் போக விடு” என்று பாபாஜி தீவிரமாகக் கூறினார். (ஒரு யோகியின் சுய சரிதம் அத்.34) ஒரு முக்தியடைந்த மகான் அப்படிச் சொல்லும்பொழுது அவர் இறைவனுடன் மும்முரமாக இருந்துகொண்டு இறைவனுடைய சித்தத்தை செயலாற்றிக் கொண்டிருக்கிறார் என பொருள்படுகிறார். அனைத்து மகான்களும் செயல் திறமுடையவர்களாக இருக்கின்றனர். இவ்வுலகில் உள்ள நல்லவற்றை பலப்படுத்த முயற்சி செய்வது சிலரின் இறைப்பணியாகும்.

மேலும் ஏற்கும் திறனுள்ள பக்தர்களின் வழியாக அவர்கள் அதைச்செய்ய முடிகின்றபொழுது இறைவனின் சக்தி பலமடைவதால், சாத்தானின் சக்தி பலவீனமாகிறது.”

குருதேவர் குறிப்பிட்டுள்ள ஒரு யோகியின் சுய சரிதத்தில் உள்ள நிகழ்வினை இங்கே குறிப்பிட விழைகின்றேன். மகாவதார பாபாஜியைப் பற்றிய விஷயமாகையால் இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள குருதேவரின் போதனைக்கு அது பொருந்தும்.

மகாவதார பாபாஜி, தன்னுடைய சீடரான ஸ்ரீ லாஹிரி மகாசயரை (லாஹிரி மகாசயர் தன்னுடைய முற்பிறவியில் மகாவதார பாபாஜியின் சீடராக இருந்தார்) ராணிகேத்திலுள்ள அலுவலகத்தில் பணி புரிவதற்காக ஒரு தந்திமூலம் வரவழைக்கச் செய்தார் பாபாஜி.

பின்னர் தன் சீடரான லாஹிரி மகாசயரை சந்தித்து அவருடைய முற்பிறவி ஆசையை நிறைவேற்றினார். முற்பிறவியில் அவர் பாபாஜிக்கு சீடராக இருக்கும்பொழுது அவருக்கு இருந்த ஓர் ஆசையை சுட்டிடக்காட்டினார்.

அது என்னவென்றால். “லாஹிரி, நீ இன்னும் தங்க அரண்மனைக்கான உன் கனவு ஆசைகளில் திளைத்துக்கொண்டிருக்கிறாயா?” என்று கேட்டார்.

‘விழித்துக்கொள்! உன் பூவுலக விருப்பங்கள் எல்லாமே நிரந்தரமாகத் தணித்து விடப்போகின்றன, என்று கூறிக்கொண்டு மறைபொருளுள்ள சில ஆசீர்வாதச் சொற்களை உச்சரித்தார்.

“என் மகனே எழுந்திரு, கிரியா யோகத் தின் மூலம் இறைவனின் சாம்ராஜியத்தை அடைய உன்னுடைய தீட்சையைப் பெற்றுக்கொள்” என்று கூறினார்.

பின்னர் அவருக்காக ஒரு தங்க அரண்மனை தோற்றுவித்து அந்த மாளிகையில் லாஹிரி மகாசயருக்கு மகாவதார பாபாஜி கிரியா தீட்சையை அருளினார். லாஹிரி மகாசயர் நிர்விகல்ப சமாதியை அடைந்து இடைவிடாமல் ஏழு நாட்களுக்கு அந்தப் பரமானந்தத்தில் திளைத்திருந்து ஆத்மஞானத்தின் ஒவ்வொரு நிலையையும் படிப்படியாகக் கடந்து மரணமற்ற பரவெளியை ஊடுருவி, மாயையின் எல்லா கட்டுப்பாடுகளும் விடுபட்டொழிந்தன. அவருடைய ஆத்மா பரமாத்மாவின் பீடத்தில் முழுமையாக நிலைபெற்றது.

எட்டாவது நாள் அவர் விழித்துக் கொண்டார். அவர் தன் குரு தேவர் மகாவதார பாபாஜியின் பாதங்களில் விழுந்து தன்னை என்றுமே பாபாஜியின் அருகில் புனித வனப் பிராந்தியத்தில் வைத்துக் கொள்ளும்படி மன்றாடினார்.

“என் மகனே மக்களின் பார்வைக்கு முன்னால் இந்தப் பிறவியில் உன் பங்கு செயல்படுத்தப்பட்டே ஆக வேண்டும். பல பிறவிகளின் தனிமை தியானத்தினால், பிறக்கும் முன்பே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் நீ இப்பொழுது உலக மனிதர்களுடன் கலந்து செயல்படவேண்டும்” என்று லாஹிரியைத் தழுவியவாறு பாபாஜி கூறினார். மேலும் அவர் கூறினார்,

“கிரியாதிறவுகோலைத் தகுதியான சீடர்களுக்கு மட்டும் உபதேசம் செய்” என்று பாபாஜி கூறினார். “தேவகுருவே, இழந்திருந்த கிரியா கலையை உயிர்ப்பித்ததன் மூலம் மனித குலத்திற்கு ஏற்கனவே ஆதரவு அளித்துள்ள தாங்கள் சீடர்களுக்கான கடுமையான தேவைகளைத் தளர்த்தி அதன் நன்மையை இன்னும் அதிகரிக்கச் செய்யலாகாதா? உண்மையாக நாடும் யாவருக்கும், அவர்கள் தொடக்கத்தில் உள்ளார்ந்த முழுமையான உட்துறவு நிலைக்கு உறுதி அளிக்க முடியாவிடினும், கிரியாவை கொடுக்க எனக்கு அனுமதி அளிக்க வேண்டுகிறேன்; உலகத்தில் மும்முனைத் துன்பங்களினால் தொடரப்பட்டு வேதனைப்படும் ஆடவரும் பெண்டிரும் விசேஷமாக ஊக்கமளிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு கிரியா உபதேசம் அளிக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டால் அவர்கள் என்றுமே விடுதலைக்கான மார்க்கத்தை நாடமாட்டார்கள்” என்று மனித



குலத்திற்காக பாபாஜியிடம் வாதாடியவாறு வேண்டினார். "அப்படியே ஆகட்டும், உன் மூலம் இறைவனின் விருப்பமே வெளியிடப்பட்டது. உன்னிடம் பணிவுடன் உதவியை நாடுவோர் எவருக்கும் கிரியாவை அளி" என்று கருணை மிக்க அந்த குரு அருளினார். மீண்டும் பாபாஜி தொடர்ந்தார்: "உன் சிஷ்யர்கள் ஒவ்வொரு வருக்கும் பகவத்கீதையில் கூறப்பட்ட இந்த மகத்தான வாக்குறுதியை திரும்பவும் எடுத்துக் கூறு; "ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்!" (இந்த தர்மத்தின் {அறநெறிச் சடங்கு அல்லது நற்செயல்} சிறிதளவு பயிற்சிகூட பெரும் பயத்திலிருந்துமாபெரும் துன்பங்கள் இயல்பாகவே உடைய திரும்பத் திரும்ப உண் டாகும் பிறப்பு இறப்பு என்ற சுழல்களிலிருந்துஉன் னைக் காக்கும்")

மறுநாள் காலையில் விடைபெறும்பொழுது ஆசிபெறுவதற்காக குருவின் பாதங்களில் பணிந்தபொழுது அவரை பிரிய மனமின்றி நிற்கும் பொழுது, அதை உணர்ந்த பாபாஜி "என் அன்பான குழந்தாய், நமக்குப் பிரிவென்பது இல்லை! நீ எங்கிருந்தாலும் சரி, எப்பொழுது என்னை அழைத்தாலும் சரி, நான் அக்கணமே உன்னுடன் இருப்பேன்" என்று மிகுந்த பாசத் துடன் லாஹிரியின் தோளைத் தொட்டு கூறினார்.

பின்னர், தானாப்பூரிலிருந்து ராணிகேத்திற்கு போடப்பட்ட அவருடைய மாற்றல் தவறுதலாக ஏற்பட்டதாகவும் ராணிகேத்தில் வேறு ஒருவரை பணியை ஏற்றுக்கொள்ள அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்றும் லாஹிரி மகாசயர் தானாப்பூருக்குத் திரும்பி வர வேண்டும் என்றும் ஒரு கடிதம் தானாப்பூரிலிருந்து வந்தது. இவ்வாறு பாபாஜியால் செயல்படுத்தப்பட்டிருக்கிறது எதற் கெனில் லாஹிரியை சந்திக்கவும் அவருக்கு கிரியா தீட்சை அளித்து குரு சிஷ்ய உறவை புதுப்பித்து பலப்படுத்துவதற்காகவும் தான்.

அவர் தானப்பூருக்கு திரும்புவதற்கு முன்னர் மொராதாபாதில் ஒரு வங்காள குடும்பத்துடன் சில தினங்கள் கழித்தார். ஆறு நண்பர்கள்அடங்கிய ஒரு குழு அவரை வரவேற்றனர். அவர் ஆன்மீக விஷயங்களுக்குப் பேச்சைத் திருப்பியபொழுது அவருடைய நண்பர்கள் வருத்தத்துடன் கீழ்கண்ட வாறு குறிப்பிட்டனர். "ஓ இந்நாட்களில் பாரதம் மகான்களின்றி வறுமையாகிவிட்டது" என்று அவருடைய நண்பர் பாபு என்பவர் கூறினார். "பாபு, இன்னமும் இந்த நாட்டில் உயர்ந்த மகான்கள் இருக்கவே செய்கிறார்கள்" என்று லாஹிரி மகாசயர் மறுத்துக் கூறினார்.

ஏதோ ஓர் உணர்ச்சிவேகத்தினால் தூண்டப்பட்டதாகஅச் சிறு குழு மிகப் பணிவுடன் தன் அவ நம்பிக்கையைத் தெரிவித்தது. அதில் ஒருவர், லாஹிரியிடம், "நீ கூறியது பகற் கனவுதான்" என்று கூறினார். "நான் அழைத்தால் என் குரு இந்த வீட்டிலேயே தோன்றுவார்" என்று லாஹிரி பதிலளித்தார். உடனே அந்த நண்பர்களின் கண்களில் உற்சாகம் ஒளிர்ந்தது. அவர் அரைமனதுடன் இரண்டு புதுக்கம்பளங்களும் அமைதியான அறையும் வேண்டுமென்று கேட்டார். "ஆகாய வெளியிலிருந்து குருதேவர் தோன்றுவார், நீங் கள் அமைதியாக வெளியில் இருங்கள்: நான் சீக் கிரமே உங்களை அழைக்கிறேன்" என்று கூறி லாஹிரி குருவை அழைத்தபடி அந்த அறைக் குள் தியானத்தில் அமர்ந்தார். இருட்டான அந்த அறைக்குள் மங்கலான இதந்தரும் ஒளி பரவி யது. அதிலிருந்து ஒளிமயமான பாபாஜியின் உருவம் வெளிப்பட்டது.


பாபாஜி


லாஹிரி

"லாஹிரி, இந்த அற்ப விஷயத்திற்காகவே நீ என்னை அழைக்கிறாய்?" என்று கடுமை யான பார்வையுடன் கேட்டார் "சத்தியம்உண்மை யாகவே தேடுபவர்களுக்கு உரியது, வெறும் ஆவலுடையவர்களுக்கல்ல. கண்ணால் பார்க் கும்பொழுது நம்புவது சுலபம்.

ஆன்மாவை ஆழ்ந்து தேட அவசியமில்லை. இந்திரியங்களைக் கடந்த உண்மையானது, இயல்பான லோகாயத அவநம்பிக்கையை யார் வெல்கிறார்களோ, அவர்களால் தகுதியுடன் கண்டுபிடிக்கப்படுகிறது. அவர் தீவிரமாக கூறி னார். "என்னைப் போகவிடு!"

லாஹிரி மசாயர், பிரார்த்தித்தபடியே அவர் பாபாஜியின் பாதங்களில் விழுந்தபடி "தெய்வீக குருவே, என் பெரிய தவறை நான் உணர்கிறேன். நான் தாழ்மையுடன் மன்னிப்புக் கேட்கிறேன் ஆன்மீக விஷயத்தில் குருடாயிருந்த இவர்கள் மனதில் நம்பிக்கையை ஊட்டு வதற்காகவே நான் தங்களை அழைக்கத் துணிந்தேன். தாங்கள் மிகுந்த பெருந் தன்மையுடன் என் அழைப்பிற்கிணங்கி இங்கு வந்திருப்பதால் தயவு செய்து என் நண்பர்களுக்கு அரு ளாசி வழங்காமல் செல்லாதீர்கள்.

அவர்கள் நம்பிக்கையில்லாத வர் கள்தாம். இருப்பினும் என் விசித்திரமான கூற்றை குறைந்த பட்சம்சோதித்துப்பார்க்கவிருப்பமுடையவர்களாக இருந்தார்களல்லவா?" என்று கேட்டார். " மிக நல்லது. நான் சிறிதுநேரம் தங்குகிறேன். உன் நண்பர்களுக்கு முன்னால் உன் சொற்கள் அவ மதிக்கப்படுவதை நான் விரும்பவில்லை" என்று பாபாஜி பதிலளித்தார். அவர் முகம் கனிவாகியது.

ஆனால் அவர் மிருதுவாகத் தொடர்ந்தார். 'இனிமேல், என் மகனே உனக்கு எப்பொழுது தேவையோ அப்பொழுதுதான் நான் வருவேன்; நீ கூப்பிடும்பொழுதெல்லாம் இல்லை" என்றார். லாஹிரி மசாசயர் கதவைத் திறந்தபொழுது அந்தச் சிறிய குழுவில் இறுக்கமான மௌனம் ஆட்சி புரிந்தது. தங்கள் புலன்களையே நம்பாததுபோல் கம்பள ஆஸனத்தில் அமர்ந்திருந்த ஒளிமயமான உருவத்தை கண் இமைக்காமல் அவர்கள் பார்த்தனர். "இது எங்களை மொத்தமாக வசப் படுத்தியதாகும்! நாங்கள் அறியாமல் இந்த அறைக்குள் யாரும் நுழைந்திருக்கவே முடியாது! என்று குழுவில் ஒருவர் நகைத்தார்.

"பாபாஜி ஒரு புன்சிரிப்புடன் முன்வந்து ஒவ்வொருவரையும் தன் கதகதப்பான, திடமான உடல் தசைகளைத் தொட்டுப்பார்க்குமாறு சைகை செய்தார்.. அவர்களுடைய சந்தேகமெல்லாம் நீங்கியது. அவர்கள் பயபக்தியுடன் வருந்தியவாறு தாங்களாகவே அவர் பாதங்களில் விழுந்து வணங்கினார்கள்.

"ஹல்வா தயாராகட்டும்" பாபாஜி இந்த வேண்டுகோளை விடுத்தார். ஹல்வா தயாரா க்கிகொண்டிருக்கையில் பாபாஜி சுமுகமாகப் பேசிக் கொண்டிருந்தார். இந்த சந்தேகிக்கும் நண்பர்கள் புனிதர்களாக உருமாற்றம் பெற்றது விந்தையே. நாங்கள் எல்லாரும் உண்டபிறகு பாபாஜி ஒவ்வொருவருக்கும் ஆசி வழங்கினார்.

திடீரென்று ஒரு மின்னல் தோன்றியது. பாபாஜி யின் உடல் மின் அணுக்களின் மூலப்பொருட்கள் அக்கணமே ரசாயன மாற்றமடைந்து பரவும் ஆவி ஒளியாகியதை கண்கூடாகக் கண்டோம். இறைவனுடன் இசைந்த இச்சாசக்தி அவருடைய உடலாக ஒன்று சேர்ந்திருந்த அண்ட வெளி அணுக்களின் பிடியைத் தளர்த்தியது: உடனே கோடிக்கணக்கான நுண் உயிர்த் துகள்பொறிகள் அண்டகோச களஞ்சியத்திற்குள் மறைந்தன.

"மரணத்தை வென்றவரை நான் என் சொந்தக் கண்களாலேயே கண்டேன்" என்று அக்குழுவில் ஒருவரான மைத்ரா மிகுந்த பயபக்தியுடன் உரைத்தார். "ஒரு குழந்தை குமிழிகளுடன் விளை யாடுவதைப்போல் அந்தப் மகாகுரு காலம் , இடம் இவைகளுடன் விளையாடினார். விண்ணுலகு, மண்ணுலகு இவற்றின் திறவுகோலை கையில் வைத்திருக்கும் ஒருவரைக் கண்டுவிட்டேன்" மைத்ரா பின்னர் மகாசயர் என்றழைக்கப்பட்டு ஆத்ம ஞானத்தில் மிக முன்னேற்றமடைந்தவரானார். இந்த நிகழ்வுக்குப் பின்னர் லாஹிரி மகாசயர் தானாப்பூருக்குத் திரும்பினார்.

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரால் எழுதப்பட்டுள்ள 'ஒரு யோகியின் சுயசரிதம் என்ற புனிதநூல் அத்.34ல் இடம் பெற்றுள்ள நிகழ்வு இது. லாஹிரிமகாசயர் ஸ்வாமி கேவலானந்தருக்கும் தமது சீடராகிய ஸ்ரீ யுக்தேஸ்வரருக்கும் கூறியுள்ள இந்நிகழ்வினை ஸ்ரீ யுக்தேஸ்வர் தன் சீடரான பரமஹம்ஸ யோகானந்தருக்கு கூறியுள்ளார். இதிலிருந்து என்ன தெரியவருகிறது என்றால் தகுந்த நேரத்தில் மகான்கள் மனிதர்களுக்காக எவ்வளவு பாடுபடுகிறார்கள் என்பதை இந்த நிகழ்வு நன்றாக புலப்படுத்துகிறது.

இவ்வாறு தியானத்தில் இறைவனைக் கண்டடைந்தவர்கள் அல்லது இறைவனுடன் இரண்டறக்கலந்தவர்கள் மேலே கூறியவாறு நிகழ்த்துவர். அவ்வாறான மகாயோகியான மகா வதார பாபாஜியின் வம்சபரம்பரையில் வந்தவர்களே ஸ்ரீ ஸ்ரீ லாஹிரி மகாசயர், ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் மற்றும் குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர். குருதேவருடைய போதனைகளை செவிமடுத்து கடைபிடிக்கின்றவர்களுக்கு மகாவதார பாபாஜி மற்றும் அவருடைய வம்சபரம்பரையில் வந்துள்ள அனைத்து குருமார்களின் அருளாசிகளை நிச்சயம் எளிதில் பெறலாம்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

# மகிழ்ச்சி

மகிழ்ச்சியைக் காட்டிலும் பலமடங்கு மேற்பட்ட உன்னதமான நிலையே ஆனந்தமாகும். நாம் சாதாரணமாக மகிழ்ச்சி என்று சொல்வது ஏதாவது ஒரு விதத்தில் உலகரீதியான விஷயத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும். ஆனால் ஆனந்தம் என்பது உலகரீதியான மகிழ்ச்சியிலும் மேம்பட்ட, ஆத்மாவினால் அனுபவிக்கப்படும் மிக உன்னதமான நிலையாகும்.

வாழ்க்கையில் எவை எல்லாம் நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறதோ அவை எல்லாம் நமக்கு துன்பத்தையும் கொடுக்கிறது. இதைப்பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு நாம் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கு உதவும் கருவிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவைகள்:

ஐம்புலன்கள்: சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்த (ஒலி, தொடு உணர்வு, காட்சி, சுவை, வாசனை) மூலமாகக் கிடைக்கும் மகிழ்ச்சியே ஐம்புலன்களின் மூலமாக கிடைக்கும் மகிழ்ச்சியாகும்.

உதாரணம்: ஐஸ்க்ரீமில் மிகுந்த விருப்பம் உள்ள மனிதன் அது கிடைக்கும் கடைக்கு சென்று ஐஸ்க்ரீம் வாங்கி சாப்பிடுகிறான். அதன் மேல் உள்ள விருப்பத்தினால் மேலும் மேலும் வாங்கி சாப்பிடுகிறான். ஆனால் முதல் கப் வாங்கி சாப்பிடும்போது உண்டாகும் மகிழ்ச்சி பிறகு நீடிப்பதில்லை. முதலில் ஏற்படும் மகிழ்ச்சி வரவரக் குறைந்து கொண்டே வந்து கடைசியாக அவன் 7–வது அல்லது 8–வது கப் வாங்கி சாப்பிடும்போது உடல் அசௌகரியத்தை உணர்கிறான். எனவே ஐஸ்க்ரீம் சாப்பிடுவதால் கிடைக்கும் மகிழ்ச்சி தற்காலிகமானது. இது வாழ்க்கையில் நாம் விருப்பப்படும் அனைத்து பொருட்களுக்கும் பொருந்தும் நம் மகிழ்ச்சி உச்சத்தை அடைந்த பின் இறங்குமுகமாகிறது.

மனம்: ஒருவரது மனதில் எழும் எண்ணங்களுக்கும் அதனால் ஏற்படும் உணர்ச்சிகளுக்கும் தொடர்பு உண்டு. (உணர்வுகளும் எண்ணங்களும் ஒன்றோடொன்று பிண்ணிப்பிணைந்தவை மகிழ்ச்சியான எண்ணங்கள் சந்தோஷத்தையும் துன்பமான நிகழ்ச்சிகளைப் பற்றிய எண்ணங்கள் வருத்தத்தையும் அளிக்கின்றன.) ஐம்புலன்களால் ஏற்படும் மகிழ்ச்சியை விட மனதினால் ஏற்படும் மகிழ்ச்சி உயர்வானது.

உதாரணம்: எந்த உணர்ச்சி நமக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கும்? ஒரு வேளை ஒருவர் மீது காதல் கொள்ளும் அனுபவமாக இருக்கலாம். உதாரணத்திற்கு ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள். ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருப்பதை கனவிலும் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர்களுடைய உறவு திருமணத்தில் முடிந்த பிறகு, அதே அளவு உச்சநிலை சந்தோஷத்தில் அவர்களால் தொடர்ந்து நீடித்திருக்க முடியவில்லை.

திருமணத்திற்குப்பிறகு ஒருவரை ஒருவர் பார்க்கும் கண்ணோட்டம் மாறி எந்த ஒருவர் தனக்கு அதிகபட்ச மகிழ்ச்சியை அளித்தார்களோ அவரைப் போல் தனக்கு துன்பத்தையும் கோபத்தையும் அளிக்கக் கூடியவர் வேறு யாருமில்லை என்ற நிலையை அடைகிறார்கள்!



புத்தி: புத்தியினால் நாம் எந்த ஒரு செயலின் பலாபலன்களையும் ஆராய்ந்து முடிவெடுக்கிறோம். நமது மனதினால் ஏற் படும் மகிழ்ச்சியை விட நம் புத்திபூர்வமாக செயல்படும்போது நமக்கு ஏற்படும் மகிழ்ச்சியின் அளவும் தரமும் உயர்வானதாக இருக்கிறது.

உதாரணம்: தனது ஆராய்ச்சியில் முழு மனதுடன் ஈடுபட்டிருக்கும் ஒரு விஞ்ஞானியின் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். பல நூற்றாண்டுகளாக மனித இனத்திற்கு புரியாத ஒரு புதிராக இருந்த ஒரு பிரச்சனைக்கு அந்த விஞ்ஞானி தீர்வு கண்டு மகிழ்ச்சியின் எல்லையை அடைகிறார். சிறிது காலத்திற்குப் பிறகு பிறரின் பாராட்டுதல்கள் மறைந்தவுடன் அவரது மகிழ்ச்சியின் நிலை என்ன? தற்சமயம் அவர் முன்பிருந்த உயர் மகிழ்ச்சி நிலையில் இல்லை. அத்துடன் அவர் புதிதாக ஏதேனும் கண்டுபிடிக்க வேண்டும் என்ற முயற்சியில் அமைதியற்று தவிக்கிறார். அதைக் காட்டிலும் மோசமாக அவரது கண்டுபிடிப்பு (உதா. ஆற்றல் சமன்பாடு ணி = னீநீ2) மனித குலத்தின் அழிவுக்கு காரணமாக விளங்கக் கூடிய அணுகுண்டு தயாரிப்புக்கு பயன்படப்போகிறது என்பதை அறிந்து மனம் நொந்து போகிறார்.

இந்த வரைபடம் எவ்வாறு ஐம்புலன்கள், மனம், புத்தி இவற்றின் மூலம் ஏற்படும் மகிழ்ச்சி தரத்திலும் கால அளவிலும் ஒன்றை விட மற்றொன்று உயர்ந்ததாக உள்ளது என்று காட்டுகிறது.

எப்படியாயிலும் ஆத்மாவின் உன்னத நிலையை உணர்ந்து அனுபவிக்கும் ஆனந்தத்தின் தரம் மிகவும் உயர்ந்தது. மேலும் அது நிரந்தரமானது. ஆத்மாவின் மூலம் நமக்கு ஏற்படும் ஆனந்தத்தை அனுபவித்து உணர முடியுமே தவிர வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது.

வார்த்தைகளின் வரையறையை புரிந்து கொள்ள உதாரணத்திற்கு சர்க்கரையின் இனிப்பு சுவையை எடுத்துக் கொள்ளுங்கள். நாக்கே இல்லாதவனுக்கு நாம் எந்த வகையிலாவது சர்க்கரையின் இனிப்பை உணர்த்த முடியுமா? இயலாது! வார்த்தைகளால் இனிப்பின் சுவையை ஒருவருக்கு உணர்த்த முடியாது. ஆத்மாவினால் அடையும் ஆனந்தத்தை போலவே சர்க்கரையின் இனிப்பையும் சுவைத்துத் தான் தெரிந்து கொள்ள முடியும். எனவே ஆன்மீக பயிற்சியின் மூலமாக மட்டுமே ஒருவர் ஆத்மாவின் ஆனந்தத்தை உணர்ந்து அனுபவிக்க முடியும்.

– மேலும் விவரங்களுக்கு:
hindujagruti தொ.எண்: 9380949626


ஆன்மிகமலர் மெயில் புக்

## ஏழு மகா ஆச்சரியங்கள்

1. மரணம் என்பது நிச்சயிக்கப்பட்ட நேரத்தில் வந்தே தீரும் என்பதை அறிந்த மனிதர்கள், கவலைப்படாமல், தன் கடமைகளச் செய்யாமல் சிரித்துக் கொண்டிருப்பது ஆச்சரியம்.!!!
2. ஒரு நாளில் இவ்வுலகம் அழிந்து போகும் என்பதை அறிந்த மனிதன், உலகத்தின்மீது மோகம் கொண்டிருப்பது ஆச்சரியம்...!!!
3. எந்த ஒரு செயலும் இறைவன் விதித்தபடியே நடக்கும் என்பதை அறிந்த மனிதன், கைநழுவிச் சென்றவற்றை எண்ணி கவலைப்பட்டுக் கொண்டிருப்பது ஆச்சரியம்...!!!
4. மறுமை வாழ்க்கைக்கான தீர்வு இவ்வுலகிலேயே இருப்பதை நம்புகின்ற மனிதன், அதனைப் பற்றி அக்கறையின்றி வாழ்ந்து கொண்டிருப்பது ஆச்சரியம்...!!!
5. நரக நெருப்பின் வேதனை பற்றி அறிந்த மனிதன், அது பற்றி சிந்திக்காமல் தொடர்ந்தும் பாவம், தவறு செய்வது ஆச்சரியம்...!!!
6. இறைவன் ஒருவனே என்று அறிந்த மனிதன், அவனைத் தவிர வேறு எவருக்கோ வணக்கத்தை நிறை வேற்றுவது ஆச்சரியம்...!!!
7. நரகம், சொர்க்கத்தைப் பற்றி அறிந்த மனிதன், உலக செல்வங்களை சேர்த்து வைப்பதில் தமது முழு வாழ்வையும் கழிப்பது மிகவும் ஆச்சர்யம்.

பாவத்தை ஒரே கணத்தில் போக்கும் சக்தி கடவுளின் திருநாமத்திற்கு இருக்கிறது. அதனால் இயன்ற அளவு நாமஜபத்தில் ஈடுபடுங்கள்.

– காஞ்சி பரமாச்சார்யார்

## காமம்

காமம் எனும் சொல்லுக்கு ஆசை என்று பொருள்.

இதை பெண் மோகத்தில் இருப்பவர்களுக்கு மட்டும் என்று எடுத்தல் கூடாது.

- ✦ ஒரு பொருளை விரும்புதல் **காமம்**
- ✦ விரும்பியது கிடைக்கவில்லை என்றால் **குரோதம்**
- ✦ பொருள் கிடைக்கப் பெற்ற பின் யாருக்கும் தராமல் இருப்பது **உலோபம்**
- ✦ விரும்பிய பொருள் கிடைத்ததில் அதன் மீது தீராத பற்று வைத்தல் **மோகம்**
- ✦ அதே பொருள் தனக்குத் தெரிந்த வேறு ஒரு நபரிடம் இருப்பதைக் கண்டு அகங்காரம் கொள்வது **மதம்**
- ✦ அந்தப் பொருள் அவனிடம் இருக்கக் கூடாது என எண்ணுதல் **மார்ச்சர்யம்**

ஆக ஆசையே வெவ்வேறு நிலையில்:

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சர்யம் என்று பெயர் பெறுகிறது.

இதைத்தான் திருமூலர் தன் திருமந்திரத்தில்,

"அறுமின்கள் அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசையை அறுமின்கள்"

என்கிறார்.

இது போன்ற எந்த ஆசையும் நிரந்தரமானது அல்ல என்பதை உணர்ந்து தெளிவடைந்து இன்பமாக வாழுங்கள்







# திருமணத்தடை நீக்கும் யாகம் ராகு கேதுவிற்கு அன்னாபிஷேகம்





வேலூர் மாவட்டம் வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் யக்ஞஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் அருளானைப்படி பௌர்ணமியை முன்னிட்டு இன்று 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை ஆண்கள் திருமணைத்தடை நீக்கும் கந்தர்வராஜ ஹோமம், பெண்கள் திருமணத்தடை நீக்கும் சுயம்வரகலா பார்வதி யாகம், தம்பதிகள் குழந்தை வரம் பெற சந்தான கோபால யாகமும் நடைபெற்றது.

திருமணத்தடைகள் உள்ள ஆண்களுக்கு ஜாதக ரீதியாக உள்ள தோஷங்களும், கிரக ரீதியாக உள்ள தோஷங்களும், நவக்கிரக தோஷங்களும், பித்ரு தோஷங்களும், மூதாதையர் சாபங்களும், சகல தோஷங்களும் நீங்கி விரைவில் திருமணம் நடைபெற வேண்டி கந்தர்வ ராஜ ஹோமம் நடைபெற்றது.

திருமணத்தடைகள் உள்ள பெண்கள் திருமணத்தடை நீங்கி விரைவில் திருமணம் நடைபெற வேண்டி சுயம்வரகலா பார்வதி யாகம் நடைபெற்றது. இந்த ஹோமத்தில் முதலில் கணபதி பூஜை, கிரகதோஷங்கள் நீங்குவதற்காக நவகிரக ஹோமம் நடத்தப்பட்டு பின்னர் சுயம்வரகலா பார்வதி ஹோமம் நடத்தபட்டது.

குழந்தை பாக்யம் இல்லாத தம்பதியர்களுக்கு விரைவில் குழந்தை பாக்யம் கிடைக்க வேண்டி சங்கல்பம் செய்து சந்தான கோபால யாகம் சிறப்பாக நடைபெற்றது.

இதனை தொடர்ந்து ராஹு கேது தோஷங்கள் விலகவும், அன்னதோஷங்கள் அகலவும் பீடத்தில் பிரதிஷ்டை செய்துள்ள ஏகரூப ராஹு கேதுவிற்கு அனாபிஷேகம் நடைபெற்றது. மேலும் சிவலிங்க ரூபமாக உள்ள 468 சித்தர்களுக்கு சிறப்பு ஆராதனைகளும் நடைபெற்றது. இந்த ஹோம பூஜைகளில் பங்கேற்ற நபர்களுக்கு ஸ்தாபகர் ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் அருள் பிரசாதமும் ஆசீர்வாதமும் வழங்கி சிறப்பு அன்னதானம் நடைபெற்றது.

- Sri Danvantri Arogya Peedam,
Ph: 09443330203,

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

www.aanmeegamalar.com



# இளமைக்கால முழுமைகளும் ஒவ்வொரு மனிதனின் மூளைக்கும் வேண்டும்

❖ முதல் வேகமான இளமைக்காலம் மிகவும் அழகு வாய்ந்தது. அது கோடை வாசஸ்தல மலை உச்சிப் பகுதிகளில் பெய்கின்ற மழைக்கும் குற்றாலத்துத் தூறல்களுக்கும் சமமானது. இது முதற்கட்ட காலம். மத்திய தர இரண்டாவது கட்டகாலம் சரியான இளமை முறுக்கின் வேகம். இதிலே யோசிக்கின்ற சற்றே பழுத்த தன்மை நமக்கு கிடைக்கும். ஆயினும் முதுமைக் கால நிலைகளும் இளமைக்கால முழுமைகளும் ஒவ்வொரு மனிதனின் மூளைக்கும் வேண்டும். இது பார்வைக்கு எப்படிப்பட்டது தெரியுமா? விதை இல்லா அழகான சிவந்த மேல்நாட்டு திராக்ஷை குளிர்ந்த சாப்பாடு என்ற ஐஸ்கிரீமின் மத்தியப் பகுதியிலே உள்ளதைப் போன்றதே.

❖ பனிக்கூட்டிப் பிரதேசங்களில் ஒரு அற்புத விளையாட்டு கால்களால் சறுக்கும் விளையாட்டாக இருக்கிறது. இதை விளையாடுபவனின் தீர்மானச்சக்தி அந்த விளையாட்டுக்காரனின் சம நிலை ஆகும். ஒரு பாலும் கோடாத அல்லது எப்பக்கமும் சாயாத அற்புத சமநிலையே அவ்விளையாட்டு வீரனின் அழகாகும். அதுவே பலமாகவும் தெளிகிறது

❖ இளமையைக் கொண்டு இளைஞர்கள் வாழ்க்கையில் செய்கின்ற பயிற்சிகள் இந்த பனிக்கட்டி சறுக்கு ஆட்டத்தைப் போன்றது. ஆயினும் அச்சமயத்தில் இடறி விழுந்து விடாதீர்கள். விழுந்தால் அதுவே உயிரின் வீழ்ச்சிக்கு காரணமாகும்.

❖ ஒரு தினசரி குடிகார னால் எப்பொழுதும் சமநிலை மனதோடு அவனால் மனது வரை இருக்கவே முடியாது. இப்படி இருக்கும் பொழுது இப்படி இருக்கப்பட்டவர்கள் எப்படி பிறரது ஒழுக்கத்தையும் நமது நாட்டையும் குறையைச் சுட்டிக்காட்டி அடிக்கடி அலசிப் பேசுகிறார்கள்? இது எனக்கே புரியவில்லை. அதனால் குடிக்கா தீர்கள். இச்செய்கை அசோகரின் ஸ்தூபியை விட உறுதியானது.

❖ ஓரிரண்டு வாய் என்ற அளவில் நான் சிறிதளவே தினமும் குடிக்கிறேன் என்ற தன்மை அதை அந்த வண்ணம் விளக்குவதும் பேசுவதும் உனக்கு நன்மையையே செய்யாது. மேலே செய்ததைப் போன்று மிகச்சிறிய அளவில் சிந்தித்தாலே அது மிகக்குறைவாக கெடுவதைக் காட்டிலும் நல்லதல்லவா? ஒரு சிறிதளவு மதுபானம் விழுங்கும் இடத்தில் ஒரு சிறிதளவு சிந்தனை பெரிய வாழ்க்கையைத் தரும். இந்த உபதேசம் சொர்க்கத்திற்கு சமமானது.



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com

# மிகப்பெரிய பக்தன்

# சகுனி

பாரதப்போரில் வீரமரணம் அடைந்த வீரர்களின் மனக்கேதம் நீக்கும் பொருட்டு பெரிய யாகம் நடைபெற்றுக் கொண்டிருந்த அரண்மனைக்குள் நுழைந்தார் கிருஷ்ணர்,. தர்மன் வரவேற்க. மற்றவர் தலைவணங்க உள்ளே நுழைந்தார் கிருஷ்ணர்.

யாகம் தொடங்கலாமே...

சொர்க்கத்தை அடைய அவரவர்க்குரிய பாகத்தை வைத்தாயிற்று அல்லவா? எனக் கேட்டார்.

ஆயிற்று கண்ணா. முதலில் பீஷ்மர் பிறகு துரோணர் என வரிசையாக வைத்தாயிற்று. உன் வருகைக்காகத்தான் காத்திருந்தோம். என்றான் அர்ஜூனன்.

யாகத்தின் முதல் வேண்டுதல் யார் பெயரில்..? கேட்டார் கிருஷ்ணர்.

குலத்தின் தோன்றலுக்கு காரணமான பீஷ்மரின் பெயரில்தான். என்றார் தர்மன்.

வீரமரணம் அடைந்தவர்க்காக நடத்தும் யாகத்தில் முதல் பாகம் சகுனியின் பெயரில் அல்லவா இருக்க வேண்டும். என்று கிருஷ்ணர் சொன்னவுடன். பாண்டவர்கள் அதிர்ந்தனர். பீமன் பல் கடித்தான். அர்ஜூனனின் கை தானாக உறைவாளை நோக்கிச் சென்றது.

என்னாயிற்று கண்ணா உனக்கு.? முதல் பாகம் என்பது நாம் அளிக்கும் மிகப்பெரிய மரியாதை. அதை பாவி சகுனிக்கா முதலில் வழங்குவது? பீமனின் கோபம் வார்த்தைகளாய் வெளிப்பட்டது.

ஆம். அதற்குத் தகுதியானவன் அவன் ஒருவனே. என்றார் கிருஷ்ணர் அமைதியாக.

பீஷ்மரை விட சிறந்தவனா சகுனி.? நய வஞ்சகமே உருவானவனுக்கு வீரமரண மரியாதையா. ?. கேட்டான் அர்ஜூனன்.

அர்ஜூனா. வீரமரணம் என்பது போர்க் களத்தில் எதிரியுடன் நேருக்கு நேர் நின்று மோதி உயிர் துறத்தல் என்பதல்ல. தான் கொண்ட கொள்கைக்காக எத்தகைய தியாகங்களையும் புரிந்து, எத்தனை தடைவரினும் தகர்த்து, தன் இலட்சியம் நிறைவேறிய பின் கடமை முடிந்ததென தன் உயிர் துறப்பதுதான் வீர மரணம். இதில் பீஷ்மரை விட உயர்ந்தவன் சகுனியே. என்றார் கிருஷ்ணர்.

பீஷ்மரின் இலட்சியம் நிறைவேறாமல் போயிருக்கலாம். போரில் பாண்டவர் தோற்கவில்லை. ஆனால், எங்களை அழித்துவிட வேண்டும் என்ற சகுனியின் இலட்சியமும் வெல்லவில்லையே..?. கேட்டான் தர்மன்.

போரில் உடன்பிறந்தவர், உற்றார் உறவினர். பெற்ற பிள்ளைகள் என அனைவரையும் இழந்து நிற்கும் நீங்கள் ஐவரும், எல்லாம் இருந்தும், எதுவும் இல்லாதவர்கள். நடைபிணமாய் வாழ்பவர்கள். என் இருப்பு ஒன்றே உங்களை இங்கு இருக்க வைத்தது.

உங்கள்வாரிசுகளை அழித்த பின்னும் சகுனியின் ஆசை நிறைவேறவில்லை என்றா சொல்கிறீர்கள்.? கேட்ட கிருஷ்ணரின் கேள்விக் கணைகளில் இருந்த உண்மையைத்தாங்க முடியாமல் தலை குனிந்தனர் பாண்டவர்கள்.





அப்படிப் பார்த்தால் சகுனியின் இலட்சியம் எங்களை அழிப்பதைவிடதுரியோதனனுக்கு வெற்றியைத்தேடித்தருவதில் தானே இருந்தது. அது நிறைவேறவில்லையே. கௌரவர்கள் அனைவரும் அழிக்கப்பட்டனரே. என அர்ஜூனன் வினவ, சிரித்தார் கிருஷ்ணர்.

அர்ஜூனா. எதை நினைத்து தன் வாழ்வை சகுனி ஆரம்பித்தானோ அதை முடித்தே சென்றான். ஒருபுறம் நூறு எதிரிகள். இன்னொரு புறம் ஐந்து எதிரிகள். உங்கள் ஐவரை அழிப்பதாக கூறியே, பல செயல்கள் மூலம் தனது நூறு எதிரிகளை உங்கள் மூலமே அழித்து. உங்களையும் நடைபிணமாக்கியவன் சகுனி என்பதை அறியாமல் பேசுகிறாய். என்றார் கிருஷ்ணர்.

என்ன? கௌரவர்களை அழிப்பதே சகுனியின் இலட்சியமா? ஏன் கண்ணா. ஏன்.?. அதுவரை மௌனமாக இருந்த திருதராஷ்டிரன் கேட்டார்.

கௌரவர்களை மட்டும் அல்ல. உங்கள் ஒட்டுமொத்த குலத்தையும் வேரறுப்பதே அவன் நோக்கம். இலட்சியம். எல்லாம். அதை நிறைவேற்ற தனி ஒருவனாக அவனால் முடியாது என்பதால். கௌரவ பாண்டவர்களுக்கிடையே விரோதத்தை வளர்த்து தன் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொண்டான் சகுனி. என்றார் கிருஷ்ணர்.

பாம்பென்று தெரியாமல் பால் வார்த்து நானே என் பிள்ளைகளின் அழிவிற்கு காரணமாகிப் போனேனே. பல் கடித்து காலை தரையில் உதைத்து தன் கோபத்தை வெளிப்படுத்தினார் திருதராஷ்டிரன்.

இல்லை. பாம்பல்ல சகுனி அடிபட்ட புலி அவன். பழிவாங்க காத்திருந்தான். நேரம்


ஆன்மிகமலர் மெயில் புக்

வாய்த்ததும் பயன்படுத்திக் கொண்டான். என்றார் கிருஷ்ணர்.

துரோகி. நல்லவன்போல் நடித்து ஏமாற்றினானே. என்றார் திருதராஷ்டிரன்.

இங்கிருக்கும் எவரையும் விட சகுனிநல்லவன்தான். உங்கள் பிள்ளை துரியோ தனனைக் கொன்றதற்காக பீமனைக் கொல்ல நினைத்த நீங்கள் நல்லவர் என்றால், அபிமன்யுவைக் கொன்ற ஜயத்ரதனை கொன்று பழிவாங்கிய அர்ஜுனன் நல்லவன் என்றால்.

பாஞ்சாலியின் சபதத்தை நிறைவேற்ற துரியோதனனைக் கொன்ற பீமன் நல்லவன் என்றால்...

தன் கண் எதிரிலேயே தன் குடும்பத்தினர் ஒவ்வொருவராய் உணவின்றி உயிர் துறப்பதை பார்த்திருந்த சகுனி. அதற்கு காரணமான உங்கள் குலத்தையே அழிக்க நினைத்து அதற்காகவே உயிர் வாழ்ந்த சகுனி.



உங்கள் எல்லோரையும் விட நல்லவனே. என்றார் கிருஷ்ணர்.

என்ன சொல்கிறாய் கண்ணா.? எங்கள் குலத்தால் சகுனியின் குடும்பம் அழிந்ததா..? இதை நம்பவே முடியவில்லையே. என் மனைவியின் சகோதரன் என்பதால் நான்தானே அவனை வளர்த்து வந்தேன். பிறகு வேறு எவர் அவன் குடும்பத்தை அழித்தது.? சகுனியின் வாழ்வின் சரித்திரம்தான் என்ன..? சொல் கண்ணா. கதறிக் கேட்டான் திருதராஷ்டிரன்.

அது எனக்கும், பீஷ்மருக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம். அது இருக்கட்டும். நான் கூறியது போல் சகுனிக்கு முதல் பாகம் தர முடியுமா. முடியாதா..? கேட்டார் கிருஷ்ணர்.

கோபப் படாதே கண்ணா. யாகத்தின் முதல் பாகத்தை எவருக்குமே தீங்கிழைக்காத, எவரிடத்தும் தவறு செய்யாத பீஷ்மரை விட்டு. சகுனிக்கு தரச் சொல்வதை எங்கள் மனம் ஏற்கவில்லையே. என்றார் தர்மர் அமைதியாக.

தர்மா. வீரனாக. நல்லவனாக, ஒழுக்கமானவனாக இருந்த சகுனியை இந்த நிலைக்கு ஆளாக்கியதே பீஷ்மர்தான் என்று அறிவாயா? சகுனியின் குடும்பத்தையே உங்கள் குலத்தின் பெருமை குறைந்துவிடக் கூடாது என்பதற்காக. அழித்து மறைத்தவர் பீஷ்மர்தான் அறிவாயா? தப்பிப் பிழைத்தவன் சகுனி, தன் வாழ்வியலை மாற்றிக் கொண்டான் தன் இலட்சியம் வெல்வதற்காக. இதில் என்ன தவறு?

போரை வெல்ல நாம் செய்த அதர்மங்கள் எல்லாம் தர்மங்களாகும்போது. அவன் கொண்ட இலட்சியம் வெல்ல சகுனி செய்த செயல்களும் தர்மங்களே. என்றார் கிருஷ்ணர்.

பாஞ்சாலியை துகிலுரிக்க வைத்ததுதான் சகுனி செய்த தர்மமா..? கேலியாய்க் கேட்டான் பீமன்.

பீமா! வரம்பு மீறிப் பேசுகிறாய். யோசித்துப் பார் அன்றைய நிகழ்வை, எனக்குப் பதிலாக என் மாமன் சகுனி தாயம் உருட்டுவார் என துரியோதனன் சொன்னவுடன்,

எங்களுக்கு பதிலாக கண்ணன் தாயம் உருட்டுவான் என உங்களில் எவரேனும் கூறியிருந்தால், அது நடந்தே இருக்காது. அங்கு போட்டி தர்மனுக்கும் துரியோதனனுக்கும்

www.aanmeegamalar.com



ஆன்மிக மாதமிருமுறை இதழ்

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்

"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"




aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

இடையேதான் நடந்ததே தவிர சகுனியுடன் அல்ல. அந்த இடத்தில் தாயக் கட்டைகளைப் போல் சகுனியும் ஓர் கருவியே. பாஞ்சாலியின் அவமானம் சகுனி யால் திட்டமிடப் பட்டதல்ல. அதற்கு முழுக்கப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் தருமனும் துரியோதனனும்தான். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த உங்களைப் போலவே சகுனியும் பார்வையாளன்தான். பழிகாரன் அல்ல. புரிந்து கொண்டு பேசு.

கடுமையாகச் சொன்ன கிருஷ்ணரைப் பணிந்தான் சகாதேவன்.

பரந்தாமா. பீமனை மன்னித்து அருளுங்கள். நீங்கள் கூறி அதை மறுத்த அவப்பெயர் எங்களுக்கு வேண்டாம். இந்த யாகத்தின் முதல் பாகம் சகுனிக்கே தரப்படும். என்றான் சகாதேவன்.அனைவரும் வேறு வழியின்றி ஒப்புக் கொண்டனர்.

யாகம் முடிந்து கிருஷ்ணர் விடைபெற்றார். அவரைப் பின் தொடர்ந்த சகாதேவன்.

பரந்தாமா. சகுனிக்காக பரிந்து பேச தாங்களே முன்வந்தது ஆச்சரியமே. இதற்கு கண்டிப்பாக வேறு காரணம் இருக்கும். அதை நானறியலாமா.? சகுனியைக் கொன்றவன் என்ற உரிமையில் கேட்கிறேன். என்றான் பணிவுடன்.

சகாதேவா. காலத்தின் மறு உருவம்தான் நீ. அதனால்தான் உனக்கு எதிர்காலம் அறியக் கூடிய ஜோதிடக்கலை எளிதாக வந்தது. சகுனியைக் கொன்றது நீயல்ல. அவன் இலட்சியம் முடிந்தவுடன் உன் உருவான காலம் அவனை அழைத்துக் கொண்டது. கவலை வேண்டாம்.

அது மட்டுமின்றி. இந்தப் பிரபஞ்சத்திலேயே அவன் காலம் முழுதும் என்னையே, அடுத்து நான் என்ன செய்வேன் என்பதையே அனுதினமும் நினைத்துக் கொண்டிருந்தவன் சகுனி ஒருவனே. அது பக்தியாக இல்லாவிட்டாலும் கூட என்னையே நினைத்திருந்ததால் அவனும் என் பக்தனே. என் ஒவ்வொரு அசைவிற்கும் பொருளறிந் தவன். அவன் உயிரோடு இருக்கும் வரை என்னால் அவனுக்காக எதுவும் செய்ய முடியவில்லை.

அவனை என் பக்தனாக... அவன் விரும்பாவிடினும். அவனை நான் ஏற்றுக் கொண்டதனால். யாகத்தின் முதல்பாகத்தை அவனுக்கு அளிக்க வைத்து பெருமைப் படுத்தினேன்.

"என்னை விரும்பி ஏற்பதோ..

விரும்பாமல் ஏற்பதோ முக்கியம் அல்ல.

என்னை ஏற்பது என்பது மட்டுமே முக்கியம். அதுபோதும். ஒருவனை நான் ஆட்கொள்ள.."

என்ற கிருஷ்ணரை வியந்து வணங்கி வழியனுப்பி வைத்தான் சகாதேவன்.

www.aanmeegamalar.com

# தீபாவளி

வெளிச்சத்தின் அருமை இருட்டில் தான் தெரியும். இருட்டில் தடுமாறும்போது, எங்கிருந்தாவது ஒளிராதா என தவிக்கிறோம். மனம் கவலையில் மூழ்கி சோகத்தால் இருண்டிருக்கும். அப்போது தீப ஒளி என்னும் நல்வழி தோன்றாதா! அதன் நடுவே நாம் குதூகலத்துடன் இருக்கமாட்டோமா என எண்ணுகிறோம்.

மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் ஒவ்வொரு கர்மாவிற்குள் மூழ்கி இருக்க வேண்டும் என்பதுதான் எழுதப்படாத விதியாக உள்ளது. அப்படி குறிப்பிட்ட கர்மாவில் மனிதன் இருந்தாலும், இறைத் தொடர்பு, நல்ல செய்கை, நல்ல எண்ணங்கள் போன்றவற்றை மறக்காமல், எந்த மனிதன் தனது கர்மாவை பூர்த்தி செய்கிறானோ அவன் தெய்வத்திற்கு சமம். கர்மா என்பதை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம், வசதி வாய்ப்பு, ஏழ்மை, பசி, பட்டினி இப்படி எதுவேண்டுமானாலும் ஒரு மனிதனுக்கு நிர்ணயிக்கப்பட்ட கர்மாவாக இருக்கலாம்.

ஒவ்வொரு கர்மாவிற்கும் ஒவ்வொரு பலன் உள்ளது. வறுமை, பசி, பட்டினி போன்றவற்றில் உழன்றாலும், தெய்வ பக்தி, நேர்மை, நல்ல எண்ணம், போன்றவை உள்ள மனிதன் தெய்வத்திற்கு சமமாக கருதப்படுவான். பொன்,பொருள், வசதி, வாய்ப்பு ஏனையவை அதிகம் இருந்தும் நல்ல எண்ணமும், மற்றவருக்கு உதவும் மனப்பான்மை இன்றி, இன்னும் பொன் பொருள் சேர்ப்பதிலேயே குறியாக இருந்தால் அவன் சாத்தானைவிட கொடூரமானவனாக கருதப்படுவான். இறக்கும் போது அவன் சேர்த்த சொத்து அவனைக் காப்பாற்றாது. ஆனால் அவன் செய்த நல்லசெயல்கள் அவனுடன் துணைக்கு செல்லும், இதை உணர்த்ததான் புராணங்கள், இதிகாசங்கள், நன்னெறி நூல்கள் போன்றவை இந்து சமயத்தில் படைக்கப்பட்டதன் நோக்கமாகும்.

இது போன்ற புராணங்கள் கூறும் கருத்தை மக்கள் மறக்காமல் இருக்கவே வருடம் தோறும் ஏதோ ஒருவிதத்தில், ஒரு பண்டிகையின் வடிவில் இந்து மதத்தில் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்துக்களின் பண்டிகைகளில் மிக உயர்ந்த பண்டிகைதான் தீபத் திருநாள் தீபாவளிப் பண்டிகை.

இந்தப் பண்டிகையின் முக்கிய நோக்கமே அகத்திலும், புறத்திலும் உள்ள கெட்ட எண்ணங்களை விட்டு விட்டு, தூய்மையான எண்ணத்துடன் மனித மனம் புத்தொளி பெற வேண்டும் என்பதே. இதை உணர்த்தவே அரக்கர்களை, தெய்வங்கள் கொன்று உலகில் நீதியை நிலைநாட்டுவதாக இதிகாச புராணங்கள் எடுத்துக் கூறுகிறது.

மேலும் இந்தப் பண்டிகையை கொண்டாட ஒருசில விரதமுறையும், மரண பயத்தைப் போக்கவும், நரகலோகத்திற்கு செல்லாமல் இருக்கவும் முன்னோர்களால் தீபாவளிப் பண்டிகைக்கென்றே சிறப்பு விரதமுறைகள் கையாளப்பட்டிருந்தது.

அதாவது துலா (ஐப்பசி) மாதம் தேய்பிறையில் திரயோதசி அன்று மகாபிரதோஷ பூஜை செய்து, யமதீபம் ஏற்ற வேண்டும். எமதர்ம ராஜாவை மனதால் பிரார்த்தனை செய்து, அகாலமரணம் சம்பவிக்காமல் காக்கும்படி பிரார்த்திக்க வேண்டும். மறுநாள் நரக சதுர்த்தசி அன்று, நரகத்திற்கு செல்லாமல் இருக்கவும், ஏற்கனவே நரகத்தில் துன்பப்படுபவர்கள் அங்கிருந்து விடுபடவும் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும். எண்ணெய், அரப்புத்தூள், சந்தனம், குங்குமம், மலர்கள், தண்ணீர், புத்தாடை, இனிப்புப்பண்டங்கள், தீபம், இனிப்பு மருந்து, நெருப்புப்பொறி ஆகியவற்றிற்கு பூஜை செய்ய வேண்டும்.

எண்ணெயில் லட்சுமிதேவியும், அரப்புப் பொடியில் சரஸ்வதியும், சந்தனத்தில் பூமிதேவியும், குங்குமத்தில் கவுரியும், புஷ்பத்தில் மோகினிகளும், தண்ணீரில் கங்கையும், புத்தாடைகளில் மகாவிஷ்ணுவும், இனிப்பு மருந்தில் தன்வந்திரியும் (தீபாவளி லேகியம் பற்றியும், அதை தயாரிக்கும் முறைபற்றியும் பக்கம் 23ல் தனியாக கொடுக்கப்பட்டுள்ளது), இனிப்பு பண்டங்களில் அமிர்தமும், தீபத்தில் பரமாத்மாவும், நெருப்புப் பொறிகளில் ஜீவாத்மாவும் நமக்கு அருள்பாலிப்பார்கள். இவற்றிற்கு கற்பூர ஆரத்தி காட்டி வணங்கினால் அனைவரும் மனம் குளிர்ந்து ஆசி வழங்கி, நம் குடும்பத்தாரை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்து வருவார்கள் என்று முன்னோர்கள் கூறி யுள்ளனர்.

### இரண்டு வகையான தீபாவளி:

கெடுதல் அழிந்து நன்மை பிறந்த கதையாக இருந்தாலும், வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும் இந்த தீபாவளியை வெவ்வேறு காரணங்களுக்காக கொண்டாடுகின்றனர்.

### தென் இந்திய மக்கள் தீபாவளி கொண்டாட காரணம் நரகாசுரன்:

தென் இந்தியாவில் இந்த தீபாவளிப் பண்டிகையை நரகாசுரனை மையமாக வைத்து கொண்டாடப்படுகிறது. நரகாசுரன் என்ற ஒரு அரக்கன் இருந்தான். அவன் தேவர்களுக்கும் மக்களுக்கும் பல்வேறு துன்பங்களை கொடுத்து வந்தான். நரகாசுரனின் உண்மைப் பெயர் பவுமன். திருமால் வராக அவதாரம் எடுத்து பூமியை துளைத்து அசுரர்களை அழிக்கச்சென்ற போது, அவரின் ஸ்பரிசத்தால் பூமாதேவிக்குப் பிறந்தவன். அசுர வதத்தின் போது பிறந்தவன் என்பதால் அசுர சுபாவம் இவனுக்கு இயல்பாக அமைந்து விட்டது. நரன் என்றால் மனிதன். மனிதனாக இருந்தாலும், துர்க்குணங்கள் நிரம்பியவனாக இருந்ததால் நரகஅசுரன் எனப்பட்டான். அப்பெயரே நரகாசுரன் என்றானது.

இதை அறிந்த மகா விஷ்ணு அவனை கொல்ல நினைத்தார். ஆனால் அவன் பூமி தாய்க்கு பிறந்தவன். அவன் தன் தாயை தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாத வரம் பெற்றிருந்தான். எனவே மகா விஷ்ணு ஒரு தந்திரம் செய்தார். நரகாசுரனுடன் போரிட்டார்.

அவன் மகா விஷ்ணு மீது அம்பு எய்தினான். இந்த அம்பு பட்டு அவர் மயக்கம் அடைவது போல் கீழே விழுந்தார். இதை பார்த்த சத்தய பாமா கோபம் அடைந்து நரகாசுரனை போருக்கு அழைத்தார். சத்திய பாமா பூமியின் அவதாரம் என்று உணராமல் அவரோடு போர் செய்தான். அன்னையின் அம்புக்கு பலியாகி விழுந்தான்.

அப்போதுதான் அவனுக்கு சத்யபாமா தனது தாய் என்று தெரிந்தது. அப்போது அவரிடம், அம்மா, நான் மறைந்த இந்நாள் மக்கள் மனதில் நிற்க வேண்டும். என்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும் மக்களும் இந்த நாளை இனிப்பு வழங்கி வெடி போட்டு கொண்டாட வேண்டும் என்று வேண்டினான்.

மகாவிஷ்ணுவும் சத்யபாமாவும் அவனுக்கு வரம் கொடுத்தார்கள். இதையொட்டி நரகாசுரன் மறைந்து மகிழ்ச்சி பொங்கிய நாள் தீபாவளி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.

### வட இந்தியாவில் ராவணை மையமாக வைத்து கொண்டாடும் தீபாவளி:

தென் இந்தியாவில் நரகாசுரனை அழித்ததால் கொண்டாடப்படும் பண்டியாக தீபாவளி விளங்கினாலும் வடமாநிலங்களில் ராவணனை மையமாக வைத்து தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. சீதாப்பிராட்டியை கடத்திச் சென்ற ராவணனை வதம் செய்துவிட்டு மிதுலைக்கு வந்த ராமரின் வெற்றியை கொண்டாடும் விதமாக வட மாநிலங்களில் தீபாவளி கொண்டாடப்படுகிறது. வால்மிகி ராமாயணத்தில் முதன் முதலாக தீபாவளி பற்றிய குறிப்புகள் உள்ளன.

### அதிசய தீபாவளி:

தீபாவளிப் பண்டிகையை இந்து சமயத்தைச் சார்ந்த பல்வேறு மதங்களான, சமண, சீக்கிய மதத்தினரும் வேறு காரணங்களுக்காக கொண்டாடுகிறனர். தீபாவளி என்றாலே அது ஐப்பசி மாதம்தான் வரும். ஆனால் சில ஆண்டுகளில் அபூர்வமாக புரட்டாசி மாதமே வந்ததுண்டு. 1944, 1952, 1990ஆம் ஆண்டுகளில் புரட்டாசி மாதம் 31ஆம் தேதி தீபாவளி வந்தது.

### சீக்கியர்களின் தீபாவளி:

1577 இல் இத்தினத்தில், தங்கக் கோயில் கட்டுமான பணிகள் துவங்கியதையே சீக்கியர்கள் இந்நாளில் கொண்டாடுகின்றனர் .

### சமணர்களின் தீபாவளி:

சமணர்களின் தீபாவளி சமணர்கள் மகாவீரர் முக்தி அடைந்த புனித தினத்தை நினைவுபடுத்தும் நாளே தீபாவளி.

**அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.**

# சித்தர்கள் கூறியுள்ள எளிய மருத்துவம்

நமது சித்த மருத்துவத்தில் வந்த நோய்க்கும் வரப்போகும் நோய்க்கும் என்றோ நமது முன்னோர் மருந்துகளை தயார் செய்யும் வழிமுறைகளை கூறிச் சென்றுள்ளனர்.

அந்த வகையில் உடல் எனும் கூட்டை உணவு வழிமுறைகளிலேயே பேண முடியும் என்பதையும் தெளிவாக கூறியுள்ளனர்.

அந்த வகையில் அவர்கள் கூறிச் சென்ற மருத்துவகுறிப்பை தொகுத்து அருந்தமிழ் மருத்துவம் 500 என்ற பாடல் மிக அழகாக ஒவ்வொரு சிறு உடல் உபாதைக்கும் ஒவ்வொருவிதமான மருந்தினை விலாவரியாக கொடுத்துள்ளது. அதைப்பற்றி பார்ப்போம்.

மூளைக்கு வல்லாரை
முடிவளர நீலிநெல்லி
ஈளைக்கு முசுமுசுக்கை
எலும்பிற்கு இளம்பிரண்டை

பல்லுக்கு வேலாலன்
பசிக்குசீ ரகமிஞ்சி
கல்லீரலுக்கு கரிசாலை
காமாலைக்கு கீழாநெல்லி

கண்ணுக்கு நந்தியாவட்டை
காதுக்கு சுக்குமருள்
தொண்டைக்கு அக்கரகாரம்
தோலுக்கு அருகுவேம்பு

நரம்பிற்கு அமுக்குரான்
நாசிக்கு நொச்சிதும்பை
உரத்திற்கு முருங்கைப்பூ
ஊதலுக்கு நீர்முள்ளி

முகத்திற்கு சந்தனநெய்
மூட்டுக்கு முடக்கறுத்தான்
அகத்திற்கு மருதம்பட்டை
அம்மைக்கு வேம்புமஞ்சள்

உடலுக்கு எள்ளெண்ணை
உணர்ச்சிக்கு நிலப்பனை
குடலுக்கு ஆமணக்கு
கொழுப்பெதிர்க்க வெண்பூண்டே

கருப்பைக்கு அசோகுபட்டை
களைப்பிற்கு சீந்திலுப்பு
குருதிக்கு அத்திப்பழம்
குரலுக்கு தேன்மிளகே!

விந்திற்கு ஓரிதழ்தாமரை
வெள்ளைக்கு கற்றாழை



சிந்தைக்கு தாமரைப்பூ
சிறுநீர்க்கல்லுக்கு சிறுகண்பீளை

கக்குவானுக்கு வசம்புத்தூள்
காய்ச்சலுக்கு நிலவேம்பு
விக்கலுக்கு மயிலிறகு
வாய்ப்புண்ணிற்கு மணத்தக்காளி

நீர்க்கோவைக்கு சுக்குமிளகுநீர்
நீரிழிவிற்கு ஆவாரைக்குடிநீர்
வேர்க்குருவிற்கு பனைநுங்குநீ
வெட்டைக்கு சிறுசெருப்படையே

தீப்புண்ணா குங்கிலியவெண்ணை
சீழ்காதுக்கு நிலவேம்பு
நாப்புண்ணிற்கு திரிபலாவேலன்
நஞ்செதிர்க்க அவரிஎட்டி

குருதிகழிச்சலுக்கு துத்திதேற்றான்
குருதிகக்கலுக்கு இம்பூரல்வேர்
பெரும்பாட்டிற்கு அத்திநாவல்
பெருவயிறுக்கு மூக்கிரட்டை

கக்கலுக்கு எலுமிச்சைஏலம்
கழிச்சலுக்கு தயிர்சுண்டை
அக்கிக்கு வெண்பூசனை
ஆண்மைக்கு பூனைக்காலி

வெண்படைக்கு பூவரசு கார்போகி
விதைநோயா கழற்சிவிதை
புண்படைக்கு புங்கன்சீமையகத்தி
புழுகுடற்கு வாய்விளங்காமணக்கு

கால்வெடிப்பா மருதாணிகிளிஞ்சல்
கரும்படை வெட்பாலைசிரட்டை
கால்சொறிக்கு வெங்காரபனிநீர்
கானாகடிக்கு குப்பைமேனி உப்பே

உடல்பெருக்க உளுந்துஎள்ளு
உளம்மயக்க கஞ்சாகள்ளு
உடல்இளைக்க தேன்கொள்ளு
உடல் மறக்க இலங்கநெய்யே

அருந்தமிழர் வாழ்வியலில்
அன்றாடம் சிறுபிணிக்கு
அருமருந்தாய் வழங்கியதை
அறிந்தவரை உரைத்தேனே!!

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com


ஆன்மிகமலர் மெயில் புக்

விரைவில்.....

## ஆன்மிகமலர் டிரஸ்ட் சார்பில்

# 1,00,00,000

# கந்தசஷ்டி கவசம் புத்தகம்



உலகம் முழுவதும்
தமிழ், ஆங்கிலம், இந்தி
மொழிகளில் இலவசமாக
வழங்கும் சேவையை
துவங்கவுள்ளது.
விருப்பமுள்ளவர்கள்
இப்பணியில்
இணையலாம்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
Ph: 08825844033